
பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 02 | வெள்ளிக்கிழமை (16-05-2003) | தொலைபேசி 2223378 | ஒலி 148

## அரசு தன்னை மாற்றாத வரை



# புலிகளின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை!

## பீற்றர்சன்னிடம் பிரபா

(கிளிநொச்சி)

**சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும் கலந்து கொள்வது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே எடுத்துள்ள தீர்மானங்களில் எவ்வித மாற்றமும் இல்லை;அரசாங்கத் தின் நடவடிக்கையின் மூலமே விடுதலைப் புலிகளின் தீர்மானத்தில் மாற்றங்கள் ஏற்பட முடியும்.இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

சமாதான பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்வதை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக இடை நிறுத்தி இருப்பது தொடர்பாகவும், யூன்மாதம் டோக்கியோவில்நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குகொள்வது குறித்தும் நோர் வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தமிழீழ விடு தலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேற்று கிளி நொச்சியில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியபோதே வே.பிர பாகரன் மேற்கண்டவாறு தெரி வித்தார்

கொழும்பிலிருந்து இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விசேட உலங்கு வானூர்திமூலம் நேற்றுக் காலை கிளிநெச்சியை வந்தடைந்த ஜோன் பீற்றர்சனை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வன் வரவேற்று மாநாட்டு மண்டபத்திற்கு அழைத்துச் சென் றார்

விடுதலைப்புலிகளின் தலை மைச்செயலகத்தில் நேற்று நடை பெற்ற இப்பேச்சு வார்தைகளின்

(10ம் பக்கம் பார்க்க)



## கொழும்பு திரும்பிய பீற்றர்சன் பிரதமர் ரணிலைச் சந்தித்தார்

(கொழும்பு)

கிளிநொச்சியில் விடுதலைப்புலிக ளின் தலைவர் வே. பிரபாகரனுடன் நேற்று பலமணி நேரம் பேச்சுவா ர்த்தை நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய நோர்வேயின் வெளி விவகார அமைச்சர் பீற்றர்சன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத் தினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேற்று பலமணிநேரம் பேச்சு வார்தை நடத்தியும் டோக்கியோ வில் நடை பெறவுள்ள உதவி வழங் கும் மாநாட்டில் விடுதலைப் புலி களை கலந்து கொள்ளச் செய்வ தற்கான முயற்சியில் தோல்விகண்ட

(10ம் பக்கம் பார்க்க)



## யப்பான் மாநாட்டில் புலிகளை பங்கு பற்றச் செய்யும் முயற்சி தோல்வி

### நோர்வே அமைச்சர் பீற்றர்சன் கவலை

(கொழும்பு)

இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய நிதி எவ்வாறு செலவு செய்ய வேண் டும் என்பதில் தங்களுக்கு மேலும் அதிகாரம் இருப்பதை உறுதி செய் யக் கூடிய வகையிலான நிதி மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்கள் முதலில் அமைக்கப் படாவிட்டால்,அடுத்த மாதம் டோக்கியோவில் நடை பெற வுள்ள மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டோம் என்று விடுதலைப் புலி கள் கூறியிருப்பதாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய பேச்சுவார்த்தையில் திருப்தி காணாத நிலையில் விரக் தியுடன் கொழும்பு திரும்பிய நோர் வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் மேலும் தெரிவித் திருப்பதாவது;

டோக்கியோவில் நடை பெறவு ள்ள உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்து கொள் ளாது போனால் இம் முடிவு சம்பந் தமாக சர்வதேச சமூகத்திற்கு விளக் கிக்கூற வேண்டிய கடமை எமக்கு உண்டு.டோக்கியோவில் நடை பெற வுள்ள மாநாடும் அமைதி முறையில் நடை பெறும் ஒரு பேச்சுவார்த்தை யாகும்.இது மிகவும் முக்கியமான

(10ம் பக்கம் பார்க்க)



பீற்றர்சன்னுடன் நேற்று வன்னியில் இடம் பெற்ற சந்திப்பு

### லொத்தர் சபை விவகாரம்

## பிரதமர் ரணிலுடன் கதிர்காமர் சந்திப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும்,பாராளுமன்ற உறுப் பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.**

அபவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா

அரசியல் கயிறிழுப்பு உச்சக் கட் டத்தை அடைந்துள்ள நிலையில் இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வுக்கும்,லக்ஷ்மன் கதிர்காமருக்கு மிடையிலான இச்சந்திப்பின் போது, சகவாழ்வு அரசியலைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தும்,அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் தற்

### லொத்தர் சபை கையேற்பு

## பிரதமருடன் ஜனாதிபதி ஆலோசித்திருக்க வேண்டும்

### சட்டமா அதிபர் கமலசபேசன் கருத்து

(கொழும்பு)

அபவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்கும் முயற் சியை முன்னெடுத்த போது அவர் பிரதமருடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும் என்று சட்டமா அதிபர்

ராயத்தைத் தெரிவித்திருக்கிறார். இந்த விடயத்தை ஜனாதிபதி மாளிகை உறுதி செய்திருக்கின்றது.

ஜனாதிபதி இது தொடர்பான ஆலோசனையை சட்டமா அதிபரி டம கோரியிருக்கவில்லை.அதனால்

ஜனாதிபதி பொருட்படுத்த வேண்டிய தில்லை என்று ஜனாதிபதி மாளி கையின் ஊடகப் பிரிவுப் பணிப்பா ளர் ஜனதாச பீரிஸ் தெரிவித் துள்ளார்.

சட்டமா அதிபரிடம் அபிப்பிராயம்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மறியல் போராட்டத்திற்கு வலி.தெற்குஅமைப்புக்கள்ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி எதிர்வரும் 20ம் திகதி வலி.வடக்கு பொது அமைப்புக்களினால் யாழ் செயலகம் முன்பாக நடத்தப்பட வுள்ள மறியற் போராட்டத்திற்கு வலி தெற்கு பொது அமைப்புக களின் ஒன்றியம் முழுஆதரவு தெரிவித்துள்ளது.

ஒன்றியத் தலைவர் சி.குமரவேல தலைமையில் நேற்று நடைபெற்ற வலி.தெற்கு பொது அமைப்புக் களின் ஒன்றியக் கூட்டத்தில் வலி. வடக்கு மக்களின் மீளகுடியர்வு தொடர்பாக ஆராய்தபின்னர் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை இம் மறியல் போராட்டம தொடர்பாக கிராமங்கள் தோறும் மக்களைச் சந்தித்து கலந்துரை யாடுவது என்றும போராட்டத்திற்கு ஆதரவாகப் பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள், சுலோகங்கள் என்ப வற்றை வெளியிடுவது என்றும் வலிதெற்கு பொது அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன. (ந-5)

## க.பொ.த.(உ/த) பெறுபேறுகளில் பாடசாலை தேர்ச்சிமட்டமும் சேர்க்கப்படும்

(கொழும்பு)

பாடசாலைத் தேர்ச்சிமட்டப் பெறுபேறுகள் க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேறுகளில் வெவ்வேறாக சேர்க்கப்படவுள்ள தாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வருடம் ஆரம்பமாகும் க.பொ.த(உ/த) வகுப்பு தொடக்கம் பாடசாலைத் தேர்ச்சிமட்ட வேலைத திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறும் உயர்தரப்பரீட்சை களில் அப்பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் வழங்கப்படும் தரங் களுக்கு மேலதிகமாக க.பொ.த வகுப்புக்களில் வழங்கப்பட்ட தேர்ச்சி மட்டமும் உயர்தரப் பரீட்சை சான்றிதழ்களில் வெவ்வேறாக சேர்ககப்படுமென பரீட்சைத் திணைக களம் அறிவித்துள்ளது. (தி)

## யாழ்.ஐந்து சந்தியில் நேற்று நடைபெற்ற மீலாத் நிகழ்வுகள்...













நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் நிகழ்வு நேற்று மாலை யாழ்.ஐந்து சந்திப் பகுதியில் நடை பெற்ற போது அதில் கலந்து கொண்ட பிரமுகர்களையும்,நிகழ்வில் கலந்து கொண்டு யாழ்.அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி,அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.நீதிபதி இ.த.விக்னராஜா,முஸ்லிம் மாணவி ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:டொறிங்டன்,சதீபன்)

## அறநெறிப் பாடசாலை

(சில்லாலை)

சுழிபுரம் ஆறுமுக வித்தியா சாலையில்,இந்து கலாசாரப் பேர வையின் அனுசரணையுடன் அற நெறிப் பாடசாலை இடம் பெற்று வருகின்றது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8மணி முதல் மு.ப.10 மணி வரை இடம் பெறும் இவ் அறநெறிப் பாடசாலையால் சாந்தை,பணிப்புலம், சுழிபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிறார்கள் பயன் பெற்று வருகின்றனர். (உ-58)

## சமாதானம் வேண்டி உண்ணா விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள புனித யுவானியார் ஆலய வளவில் நாளை சமாதான முயற்சிகளை விரைவு படுத்தக் கோரி,உண்ணா விரதமும் அமைதிப் பிரார்த்தனையும் இடம் பெறவுள்ளது.

யாழ்.மறை மாவட்ட மனித முன் னேற்ற நடுநிலையத்தினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

காலை 9 மணி முதல் பி.ப 3 மணி வரை இந்த உண்ணா விர தமும் அமைதிப் பிரார்த்தனையும் இடம் பெறவுள்ளது. (உ-7)

## பொலிஸ்மா அதிபர் வெளிநாட்டில்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்த ராஜா வெளிநாட்டு விஜயத்தை மேற் கொண்டுள்ளதனால் அவரது கடமை களை சிரேஷ்ட பொலிஸ்மா அதி பர் சந்திர சிறி பெர்ணான்டோ தற் காலிகமாக பொறுப்பேற்றுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்த ராஜா நாடு திரும்பும் வரை சந் திரசிறி பெர்ணான்டோவை பதில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமா ரதுங காவே பணித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (உ-10)

## சிநேகபூர்வ துடுப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சயன்ஸ் அக்கடமி ஆசி ரியர்களுக்கும் மாணவர்களுக்குமி டையிலான சிநேக பூர்வ மென்பந்து துடுப்பாட்டம் இன்று மாலை 3 மணி க்கு யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராக யாழ்.நல்லூர் அரசியல் துறைப் பெறுப்பாளர் பொ.ஈஸ்வரன் கலந்து கொள்வார்.

## பரிசளிப்பு விழா

(காரைநகர்)

காரைநகர் தியாகராசா மத் திய மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில கல்லூரி மண்டபத்தில் நடை பெற வுள்ளது

இவ்விழாவில் காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம் பிரதம விருந்தினராகவும் தீவக வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி.ஜே. இராதாக்கிருஷ்ணன், வைத்திய கலாநிதி திருமதி சி.கனகசபை ஆகியோரும் சிறப்பு விருந்தினர்க ளாகவும் கலந்து கொள்ளவுள்ளார் (தி-246)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகு வழங் கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் பரதனின் "ஆவாரம்பூ" எனும் திரைப்படம் (தமிழ்) நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்பட வுள்ளது.ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தினால் விவசாய வாரத்தை முன்னிட்டு நடாத்தப்படும் நாடகப் போட்டி எதிர் வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடை பெறவுள்ளது. (ந-5)

## திருமறைக் கலாமன்ற சமாதான மாநாடு இரண்டாம் நாள் நிகழ்வுகள் . . .















# ஆன்ம ஒடுக்கத்திற்காய் அமைந்த இடம் ஆலயம் முறைப்படிபூசைகள் இறை சாந்நித்தியம் தரும்


ஆலயம் என்பதற்கு எல்லா உயிர்களும் லயம் அடையும் (ஒடுங்கும்) இடம் என்று பொருள். எல்லோரும் ஒன்று கூடி இறைவனை வணங்குவதற்குரிய இடம். ஆ என்பதுபசு-இது ஜீவர்களைக் குறிக்கிறது. லயம்- ஒடுக்கம், ஜீவர்கள் தமது ஆணவ,காமிய, மாயை என்னும் மும்மலங்களிலிருந்து நீங்கி இறைவனிடம் ஒடுங்குவதற்குரிய இடமாக விளங்குகிறது ஆலயம்.கடவுளுக்கு உரிய இருப்பிடமாகவும் இதுவிளங்குகிறது.

ஆலயம் என்பதை மனித உடலாகக்கொண்டால் கோபுரம் அதன் வாய்,நந்திஅதன்நாக்கு,கொடிமரம் அதன் உள் நாக்கு, தீபங்கள் என்பன பஞ்சேந்திரியங்கள். கர்ப்பக்கிருகம் என்பது இதயம்,சிவலிங்கம் உயிர் என்று கொள்ளலாம்.

### ஐந்து பிரகாரமும் ஐந்து சரீரங்களும்

ஆலயத்தில் ஐந்து பிரகாரங்கள் உண்டு.கர்ப்பக்கிருகத்தை அடுத்துள்ள பிரகாரம் அந்தர் மண்டபம், அதை அடுத்துள்ளது அந்தர் காரம், அதற்கு அடுத்திருப்பது மத்தியகாரம், அதனை அடுத்திருப்பது மாரியாதா என்றும்,அதற்கும் வெளியே இருப்பது மஹாமாரியாதா என்றும் அழைககப்பெறுவன.

காரண சரீரம்,கஞ்சுக சரீரம், குண சரீரம், சூக்கும சரீரம்,தூல சரீரம் என ஜீவனுக்கு ஐந்து வகையான உடல்கள் இருக்கின்றன. காரண சரீரம் ஆனந்தமயகோசம் என்றும், கஞ்சுக சரீரம் விஞ்ஞானமய கோசம் என்றும்,குணசரீரம் மனோமய கோசம் என்றும்,சூக்குமசரீரம் பிராணமயகோசம் என்றும்,தூல சரீரம் அன்னமய கோசம்என்றும் கோசங்கள் ஐந்துவகைகள். ஆலயத்தில் அமைந்துள்ள ஐந்துவகையான பிரகாரங்களும் அன்னமய கோசம் முதலான ஐந்து கோசங்களையும் குறிக்கும்.ஐந்தாவது பிரகாரத்தை விட நான்காவது பிரகாரம் நுண்மையானது. அன்னமய கோசத்தை (தூல சரீரத்தை) விடப்பிராணமய கோசம்(சூக்குமசரீரம்) நுண்மை



யானது. இவ்வாறே மற்ற நான்கு கோசங்களையும், பிரகாரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் காரண சரீரமாகிய ஆனந்தமய கோசம் மிக மிக நுண்மையானது. கர்ப்பக்கிருக ஆவரணமும் மிக நுண்மையானது. சரீர தத்துவமே ஆலய தத்துவமும் என்பது இதனால் தெளிவாகும்.

சிவாலயத்திலுள்ள சிவலிங்கம் பதியையும்,நந்தி பசுவையும், பலிபீடம் பாசத்தையும் குறிக்கும். இங்ஙனம் பதி,பசு,பாசவிளக்கமே சிவாலயமாகும்.ஆலயத்திலுள்ள குளத்தில் மூழ்குதல் சத்தி நிபாதம்-திரு அருள் வீழ்ச்சியைக் குறிக்கும்.இது ஜீவன் மேலும் பக்குவமடைதலைக காட்டுகிறது. ஐந்து பிரகாரங்களையும் வலம் வருவது தத்துவங்களைக கடந்து சிவத்தை அடைதலைக் குறிக்கிறது.

### சிவலிங்கத்தின் விளக்கம்

எந்த இடத்தில் பிரளயகாலத்தில் சேதன,அசேதனப் பிரபஞ்சங்கள் அனைத்தும்ஒடுங்கிப்பின்னர் சிருஷ்டிக் (படைப்புக்) காலத்தில் எதிலிருந்து மீண்டும் உற்பத்தியாகின்றனவோ அதுவே லிங்கம் எனப்படும்.'லிம்' என்பது நடுங்குவதையும் 'கம்' என்பது ஒடுக்கத்திலிருந்து வெளிவருவதையும் காட்டுகிறது.லிங்கம் என்பது சித்தரித்தல் எனவும் பொருள்படும். சிவபெருமான் படைப்பு முதலான ஐந்தொழில்களாலும் (பஞ்சகிருத்தியங்களாலும்) இந்தப் பிரபஞ்சத்தைச் சித்தரிக்கின்றதால் சிவலிங்கம் எனப் பெயர் பெற்றது.ஆலயத்திலுள்ள சிவலிங்கம் சிவபெருமானது அருவுருவத் திருமேனியைக் குறிக்கும்.

## வெள்ளி நற்சிந்தனை

### குடமுழுக்கு ஏன்?

முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயத்திற்குக் கும்பாபிஷேகம் எனப்படும் குடமுழுக்கு விழா நிகழ்த்தினால் தான் இறைவனின் சாந்நித்தியம் (திருத்தோற்றம்) என்பது பரிபூரணமாக இருக்கும். ஆகமங்கள் நான்கு வகையான குட முழுக்கு முறைக்ளைப்பற்றிக் கூறிப்பிடுகின்றன.

1) புதிதாகக் கட்டப்பட்ட கோயிலுக்கு குடமுழுக்கு நடந்தால் அது அனாவர்த்தனம் எனப்படும்.

2) நீண்ட காலமாக கோயிலில் பூசை செய்யப்படாமல் சீர் குலைந்து இருந்தால் அதனைச் செப்பனிட்டு நிகழ்த்தப்படும் குடமுழுக்கு ஆவர்த்தனம் (மறுதரம்) எனப்படும்.

3) கர்ப்பக்கிருகம், விமானம், பிரகாரம்,கோபுரம்,பலிபீடம்,கொடிமரம், தெய்வப்படிமங்கள் ஆகிய இவற்றில் சிதைவோ,பிளவோ, குறைவோ ஏற்பட்டிருந்தாலும், முன்னர் சாத்தப்பட்டிருந்த அஷ்டபந்தனம் சிதைந்திருந்தாலும்,விமானத்தில் வண்ணம் அழிந்திருந்தாலும், இளம் கோவில்(பாலாலயம்) செய்து எல்லாவற்றையும் சரி செய்து குடமுழுக்குச் செய்வது புனராவர்த்தனம் (மறுதரம்)எனப்படும்.

4) கர்ப்பக்கிருகம் முதல் வெளிப் பிரகாரம் வரையில் உள்ள இடத்தில் எதிர்பாராத விதமாகயாருக்கேனும் மரணம் ஏற்பட்டாலும், அசௌசம்(தீட்டு)முதலிய தோஷங்களையுடையவர் கொடிமரத்தைத் தாண்டி ஆலயத்துக்குள் நுழைந்தாலோ, நாய், கழுதை, பன்றி முதலிய மிருகங்கள் உள்ளே நுழைந்தாலோ பிராயச்சித்தம் செய்து சாந்தி செய்வது அந்தரீதம் (கழித்தலால் உண்டாகும் சேடம்) எனப்படும்.

ஆலயத்தில் முறைப்படி பூஜை நடைபெறாவிடில் சிவபெருமான் லிங்கத்தை விட்டு விமானத்துக்கு வந்து மூன்று வருடங்கள் வரையிலும் யாவருக்கும் அருள் புரிந்து கொண்டிருப்பார்.மூன்று வருடங்களுக்கு மேற்பட்டால் ஆலயத்தின் தல விருக்ஷத்தில்இருந்து ஆவீர்பவித்து அனுக்கிரகம் செய்து கொண்டிருப்பார். பன்னிரண்டு வருடங்களுக்கு மேற்பட்டால் தல விருக்ஷத்திலிருந்து நீங்கி தமது எண வகை வடிவங்களுள் ஒன்றாகிய சூரிய மண்டலத்தில் ஆவீர்பவித்து விடுவார். ஆகையால் பண்ணிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழாவை நடத்த வேண்டும் என்பது நியதி. □

சிவதொண்டன்

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பிரந்திய உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் மாநகரசபை ஆணையாளர்களுக்கான முக்கிய கலந்துரை யாடல் ஒன்று எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை திருகோண மலையிலுள்ள உள்ளூராட்சித்திணைக் களத்தில் நடைபெறவுள்ளது. (தி-4)

## புதிய வள்ளங்கள் பதிவு

(குருநகர்)

தென்பகுதியில் இருந்து கொள்வனவு செய்து குருநகருக்கு எடுத்துவரப் படும் இயந்திர வள்ளங்களை அதன் உரிமையாளர்கள் குருநகர் கடற்றொழில் கூட்டுறவுச்சங்கத்தில் பதிவுசெய்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென சங்கத் தலைவர் அ.வின்சஸ்யோஸ் தெரிவித்துள்ளார். (உ-74)

## மன்று அங்குரார்ப்பணம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்கான மன்று அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் காரைநகர் பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

காரைநகர் பிரதேச உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சமுர்த்தி மன்ற நிர்வாக உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது.

மன்றின் தலைவராக ந.பாரதி, உபதலைவராக திருமதி தே.செந்தில் நாதன்,செயலாளராக செல்வி ததலைக்கும்உபசெயலாளராக ந. இராஜசிவம் பொருளாளராக ப. இராதா கிருஷ்ணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-246)

## மூதூர் -திருமலை படகு சேவை

# துறைமுக வாயிலூடாக நடத்தக் கோரிக்கை

(கொழும்பு)

திருகோணமலைக்கும் மூதூருக்குமிடையிலான பயணிகள் இயந்திரப்படகுச்சேவை துறைமுக வாயிலை அண்டிய கடற்பிரதேசத்தின் ஊடாக நடத்த அனுமதிக்குமாறு கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் என். பி. கோ. நிபந்தெனிய தலைமையில் நேற்று முன்தினம் நடைபெறற கூட்டத்தில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரண்ணங்களை கருதி துறைமுகவாயிலை அண்டியபிரதேசத்தின் ஊடாக இப்படகுச்சேவை நடத்த கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

இந்நிலையில் இப்படகுச்சேவை பிறிமா ஆலையை ஆண்டிய கடற்பகுதி ஊடாக நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் கற்பாறைகள் நிறைந்து காணப்படுவதால் படகுகளுக்கு சேதம் ஏற்படுவதுடன் உயிராபத்துக்களும் ஏற்படுகின்றன.

எனவே இத்தகைய ஆபத்து மக்க நிலையை நீக்கும் பொருட்டு சமாதான சூழ்நிலையில் துறைமுக வாயிலை அண்மித்த கடற்பிரதேசம்ஊடாக இப்படகுச்சேவையை நடத்த வேண்டும் என அரசஅதிபரிடம கோரிக்கை விடப்பட்டது. (தி)

## கடல்வள தொ.நு. கல்லூரிக்கு

# நிரந்தரக் கட்டடம் அமைக்க 26 மில்லியன் தேவை

(குருநகர்)

யாழ். கடல்வள தொழில் நுட்பக் கல்லூரிக்கு நிரந்தரக்கட்டடம் அமைப்பதற்கு 26 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.அதற்கான சிபார்சினை மொறாட் நிறுவனம் வழங்கியுள்ளது.

பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கலும் அது சார்ந்த நூல்கள் கையளித்தல் வைபவமும் யாழ். கடற்றொழில் நுட்பக்கல்லூரியில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராக கலந்து உரையாற்றிய கடல்வள விரிவாக்கல் உதவிக் கல்விப்பணிப்பாளர் எ.யோசெப் மேற்கண்ட தகவலை வெளியிட்டாா. (உ-74)

## குழந்தைகளின் வேண்டுகோள்

# நூல் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற சுகாதார கல்வி அதிகாரி இணுவையூர் கா.வைத்தீஸ்வரன் எழுதிய ''குழந்தைகளின் வேண்டுகோள்'' நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணுவில் மஞ்சத்தடி அரச சோலை விநாயக கோவிலில் யாழ். மாவட்ட பலநோக்குச் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பொ.கனக சபாபதி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், பிரதம் விருந்தினராக வைத்திய கலாநிதி என். சிவராசா கலந்துகொள்வார்.

நூல் வெளியீட்டு உரையை கவிஞர் சோ. பத்மநாதனும், நூல் ஆய்வுரையை ஆசிரியர் ந. விஜயசுந்தரம் நிகழ்த்த, ஏற்புரையை நூலாசிரியர் கா. வைத்தீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

## 'சார்ஸ்' அவதானிப்புக்காக

# சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று யாழ். வந்துசேர்ந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் ''சார்ஸ்'' பீதி உருவாகி இருப்பதை அடுத்து, அதுதொடர்பாக நேரில் அவதானிப்புக்களை நிகழ்த்தி உண்மை நிலையை கண்டறிவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஹஹந்த லியனகே நேற்று இங்கு வருகைதந்துள்ளார்.

நேற்றுக்காலை 9.30மணிமுதல் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர், வைத்தியர்கள், தாதிமார்களுடன் நீண்ட நேரம் இதுபற்றிக் கலந்துரையாடிய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் சார்நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், இந்நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்கான வசதிகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை, நேற்று பருத்தித்துறை வைத்தியசாலைக்குச்சென்று நிலைமைகள் குறித்து ஆராய்ந்த இவர், இன்று தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கும் செல்லவுள்ளார். (உ-7)

## அடிக்கடி மின்தடை

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் கல்வளைப் பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப்பகுதியைச் சேர்ந்த சிலர் மின்சாரத்தை தடை செய்யும் நாச வேலைகளில் ஈடுபட்டு வரவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (உ-232)

## வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சி

(நவக்கிரி)

குடாநாட்டில் அண்மையில் வீசிய மினி சூறாவளி காரணமாக வாழைத்தோட்டங்கள் பலவும் நாசமாகி உள்ளன.

நீர்வேலி,அச்சுவேலி,நவக்கிரி, சிறுப்பிட்டிப்பகுதி விவசாயிகள இதனால் பெரும் நட்டம் அடைந்துள்ளனர்.

இதேவேளை,முறிந்த வாழைக் குலைகள் பெருமளவில் சந்தைகளில் காணப்படுகின்றன.

இதன் காரணமாக வாழைப் பழத்தின் விலை வெகுவாக வீழ்ச்சி கண்டுள்ளது. (உ-233)

## விபத்தில் யுவதி படுகாயம்

(மானிப்பாய்)

மோட்டார் சைக்கிள்-ஹைஏஸ் வாகன விபத்தில் சிக்கி யுவதி ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த திங்களன்று இணுவில் சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்தில் வா.பிரபாலினி (வயது - 24) என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-232)

## தரம் 09 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/-,500/-,250/- மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : ''தாய் அன்பிற்கு நிகரேது''

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------------------------

பாடசாலை :------------------------------------------

கற்கும் தரம் :------------------------------------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------------

ஆசிரியர்

# அதிவேக ரயிலில் அதிகாலை தீ விபத்து 38 பேர் உடல் கருகி மாண்டனர்

## பஞ்சாப் மாநிலத்தில் பரிதாபச் சம்பவம்

(புதுடில்லி)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் அதிவேக ரயில் ஒன்று தீப்பற்றிக் கொண்டதில் அதில் பயணம் செய்த 38 பேர் உடல் கருகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மும்பையிலிருந்து அபிற்ஷாய் நகருக்குச் சென்று கொண்டிருந்த வேளை இத்தீவிபத்து நிகழ்ந்தது.

இதன்போது தீப்பற்றிக் கொண்ட ரயிலின் பிற்பகுதியில் உள்ள 3 ரயில் பெட்டிகளும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. தீப்பற்றும் போது இந்தப் பெட்டிகளில் தூக்கத்தில் இருந்த பயணிகளே உடல் கருகி உயிரிழந்ததாகவும் ரயில்வே அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 8 முதல் 12 வயதிற்கிடையிலான சிறுவர்களே என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்துயரச் சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த ரயில்வே அமைச்சர் நீதிஸ்குமார், விபத்துக்குள்ளானவர்களுக்கான உதவிகளையும் மீட்புப் பணிகளையும் தீவிரப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் விபத்து ஏற்பட்டதற்கான எந்தக் காரணமும் இதுவரை தெரியவரவில்லை என்றும், இது குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட அனர்த்தமாக இருக்கமுடியாது என்றும் கூறியுள்ளார். (உ-2)

## உபஜனாதிபதி மீது தேசத்துரோக குற்றச்சாட்டு

(சுவா)

3 ஆண்டுகளுக்கு முன்னர் பிஜியில் நடந்த சதிப்புரட்சி காரணமாக அந்நாட்டின் உபஜனாதிபதி ஜோர்ஜ் பீரிஸ் நௌஷேகலாவுதீன் மீது தேசத்துரோக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றஞ்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமானால் மரணதண்டனை பெறநேரிடும் என்று சுவான் நீதிமன்றம் கூறியுள்ளது. (உ-2)

## அமெரிக்கா தேடிவந்த சதாமின் மருமகன் சகாவும் கைதானார்

(வாஷிங்டன்)

அமெரிக்காவினால் தேடப்பட்டு வருவோர் பட்டியலில் 28வது இடத்திலுள்ள ஃபெதில் மஹ்மூத்கரீப் என்பவரை ஈராக்கில் வைத்து நேற்று முன்தினம் அமெரிக்கப் படையினர் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் தலைமையிலான பாத். கட்சியின் பாபில் மாவட்ட தலைவராக இருந்து வந்துள்ளார்.

சதாமுடன் தொடர்புடைய முக்கிய நபர்கள் 55 பேரை பட்டியலிட்டு அவர்களை அமெரிக்கா ஈராக்கில் தேடி வருகின்றது.

இவர்களில் 20 பேரை தற்போது அமெரிக்கா பிடித்துள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-2)

## கார்க்கில் பகுதியில் மீண்டும் பதற்றம்

(புதுடில்லி)

இந்தியா பாகிஸ்தான் இடையிலான கார்க்கில் எல்லைப் பகுதியிலுள்ள இந்தியப் படையினர் மீது பாகிஸ்தான் படையினர் திடீர்த் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முதல் கனரக துப்பாக்கிகள் மற்றும் பீரங்கிகள் சகிதம் பாகிஸ்தான் படையினர் தாக்குதல் நடத்தியதாகவும். இதற்கு இந்தியப் படையினர் எதிர்த்தாக்குதலை நடத்தி வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கார்க்கில் எல்லைப்பகுதியில் பெரும் போர் வெடித்தமையும் இதனையடுத்து பல ஆயிரம் படையினரை இரு நாடுகளும் தத்தமது எல்லைப் பகுதிகளில் நிறுத்தி வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.(உ-2)

## பொல்லாதவர்களின் கைகளில் பொடா சட்டம் சிக்கிவிட்டது

### கலைஞர் கருணாநிதி ஆதங்கம்

(புதுடில்லி)

பொடா சட்டம் பொல்லாதவர்களின் கைகளில் சிக்கிவிட்டதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

பத்திரிகைச் சுதந்திரப் பாதுகாப்புக் குழு ஒன்று அமைப்பது தொடர்பில் தமிழக அரசின் ஒடுக்குமுறைகளைக் கண்டித்து, நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே கருணாநிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், பத்திரிகைகளுக்கு சுதந்திரம் இல்லை எனக் கூறுவதை விட தமிழகத்தில் சுதந்திரமே இல்லை என்பதே உண்மை என்றார்.

இந்தக் கூட்டத்தில் முக்கிய உரைகள் ஆற்றிய கருணாநிதி, மருத்துவர் இராமதாஸ், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இளங்கோவன் ஆகியோர் பொடா சட்டத்தை பத்திரிகையாளர்களுக்கு எதிராக தமிழக அரசு பயன்படுத்துவதை எதிர்த்துக் கருத்து வெளியிட்டனர்.

இக்கூட்டத்தில் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் வரதராஜன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நல்லகண்ணு ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-2)




## மத்தியகிழக்குவிடயத்தில் ஈரான்தலையிடாது

### ஜனாதிபதி கதாமி அறிவிப்பு

(தெஹரான்)

மத்தியகிழக்கில் நிலவும் பதற்றத்தைத் தணிப்பதில் தமது நாடு அக்கறை கொள்ளவில்லை என ஈரான் ஜனாதிபதி மொகமட் கதாமி தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் தாம் தலையிடுவது தமது பூர்வீக எதிரியான இஸ்ரேலின் கைகளில் சிக்குவதாக அமைந்துவிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லாப் போராளிகளைக் கட்டுப்படுத்த லெபனான், சிரியா ஆகிய நாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமெரிக்கா நிர்ப்பந்தித்துள்ள நிலையிலேயே கதாமி இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரானின் அணு ஆயுதத் திட்டம் தொடர்பாக அமெரிக்கா ஆத்திரம் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

## தொடர் குண்டுத் தாக்குதல்! சவுதி இளவரசர் கடும் கண்டனம்

(ரியாத்)

சவுதியின் தலைநகர் ரியாத்தில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் இஸ்லாத்தின் பார்வையில் பாவிகள் என்று அந்நாட்டு பட்டத்து இளவரசர் அப்துல்லா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ரியாத்தில் அடுத்தடுத்து நாலு இடங்களில் தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன்போது சவுதி அரேபியர்கள், அமெரிக்கர்கள் உட்பட 29 பேர்வரை உயிரிழந்தனர்.

இந்தக் கொடூரச் சம்பவம் குறித்து சவுதி அரேபிய நாட்டின் பட்டத்து இளவரசர் அப்துல்லா நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றினார்.

அந்த உரையில்,

குண்டுத்தாக்குதல்களை நடத்திய தீவிரவாதிகள் சட்டவிரோதமானவர்கள், மனிதமாண்புகள், இஸ்லாமியக் கோட்பாடுகள் தெரியாத இரத்த வெறி பிடித்த கயவர்கள். இவர்களை நிச்சயம் ஒழித்துக் கட்டுவோம்.

இராட்சத குணம் கொண்ட இந்தத் தீவிரவாதிகள் மாபெரும் பாவிகள். இவர்கள் நரகத் தீயில் செத்துப்போவார்கள். கடவுளின் கோபத்துக்கு ஆளாவார்கள்.

யார் ஒருவனைக் கொல்கிறானோ அவன் மோட்சத்தின் காற்றைக்கூட நுகர முடியாது என்று முகமது நபிகள் கூறியுள்ளார்.

எனவே 29 பேரைக் கொன்ற அந்தத் தீவிரவாதிகள் நிச்சயம் நரகத்திற்கே போய்ச் சேர்வார்கள் என்று குறிப்பிட்டார். (உ-2)

## அணுஆயுதத் தயாரிப்பு

## அமெரிக்கப் படையின் திட்டத்திற்கு செனற்சபை அங்கீகாரம்

(வாஷிங்டன்)

சிறியரக அணுஆயுதங்களைத் தயாரிக்கும் அமெரிக்கப் படையின் திட்டத்திற்கு அந்நாட்டின் செனற்சபை அங்கீகாரமளித்துள்ளது.

அத்துடன், இவ்வாறு தயாரிக்கப்படும் அணு ஆயுதங்களின் சோதனைகளை நிலத்திற்கடியில் நடத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அணுஆயுதங்களைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியினை மேற்கொள்ள கடந்த 10 ஆண்டுகளாக அமெரிக்க நாடாளுமன்றத்தினால் அமெரிக்காவிற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் தற்போது நீக்கப்பட்டதையடுத்து சிறிய அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் நோக்கில் அமெரிக்கப் படையினர் செனற்சபையின் அனுமதியை கோரியிருந்தனர்.

இக்கோரிக்கை குறித்து செனற்சபையில் ஆராய்ந்த பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் இத்திட்டம் அணுஆயுதக் கட்டுப்பாட்டு நிறுவனம் பெரும் கவலை வெளியிட்டுள்ளது.

அணுஆயுதங்கள் உற்பத்தி செய்யக் கூடாது என்ற சர்வதேச மட்டத்திலான ஒப்பந்தத்தில் அமெரிக்கா முன்னர் கைச்சாத்திட்டுள்ளமையும், இதனையும் மீறி தற்போது அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அணுஆயுதக் கட்டுப்பாட்டை வலியுறுத்துவோருக்கு பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளதென அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (உ-2)

## கட்டளை அதிகாரிக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(பாரூஸ்ஸெல்ஸ்)

சதாம் ஹுசைனின் ஆட்சியை கவிழ்க்கும் போர் நடவடிக்கைகளிற்கு தலைமை தாங்கிய பிரதான கட்டளையிடும் அதிகாரி ஜெனரல் ரொமிபிராங்குக்கு எதிராக பெல்ஜியம் நீதிமன்றத்தில் போர்க் குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கினை பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரே தாக்கல் செய்துள்ளார்.

ஈராக் போரின் போது பாதிக்கப்பட்ட ஈராக்கியர்களின் சார்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டத்தரணி கூறியுள்ளார். (உ-2)

## அமெரிக்க–தென்கொரிய அதிபர்கள் இணைந்து செயற்பட இணக்கம்

(வாஷிங்டன்)

வடகொரியாவின் அணுவாயுதத் திட்டத்தை முற்றுமுழுதாகத் தடுத்து நிறுத்துவது தொடர்பில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்சும், தென்கொரிய ஜனாதிபதி ரோமூகூரும் இணக்கம் கண்டுள்ளனர்.

இரண்டு நாட்டுத் தலைவர்களும் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

வடகொரியாவில் அணுஆயுதத் திட்டம் முன்னெடுக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று இவ்விருவரும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## ஆர்ஜென்டீன தேர்தல் முன்னாள் ஜனாதிபதி வாபஸ்

(ப்யூனஸ் அயர்ஸ்)

ஆர்ஜென்டீனாவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து முன்னாள் ஜனாதிபதி ஹாலோஸ்மெனன் விலகிக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே நடத்தப்பட்ட முதற் சுற்றுத் தேர்தலில் போட்டியிட்ட ஹாலோஸ்மென்னுக்கும் நெஸ்ரஹேச்னுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததை அடுத்தே இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், இரண்டாம் சுற்றில் தனக்கு ஆதரவு கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து கொண்டமென்னும் தேர்தலில் இருந்து விலகிக் கொள்வதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இதன்படி இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நடத்தப்படாமலேயே நெஸ்ரஹேச்ன, ஆர்ஜென்டீனாவில் புதிய ஜனாதிபதியாகும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. (உ-9)

## வெள்ளி முற்றம்

# பதில் அடி!

இதுவரை நடந்தது, இப்போது நடந்துகொண்டிருப்பது எதையுமே தேவானந்தனால் நம்ப முடியவில்லை. எல்லாமே ஒரு இனியகனவுபோல, ஆனால் நிஜமாகவே இப்போது அவன் கண்முன்னேயே நடந்து கொண்டிருக்கிறது. நடப்பவற்றைப் பார்க்கும் போது அவனுக்கு மிகவும் சந்தோசமாக வானத்தில் எங்கேயோ இனம் புரியாத இடத்தில் இன்னும் மேலே,மேலே பறப்பது போல் இருக்கிறது.

இருக்காதா பின்னே! இன்னும் சில நிமிடங்களில் காவேரி அவனுக்கு மனைவியாகப்போகிறாள்.. அவன் வீட்டில் அவனுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று அவன் பெற்றோர்முடிவு செய்து எத்தனையோ புரோக்கர்களைப் பிடித்து பெண்தேடி கடைசியாக இன்னும் சில நிமிடங்களில் அவனுக்கு மனைவியாகப்போகின்ற இந்தக்காவேரி வீட்டிற்கு அவனைப் பெண் பார்ப்பதற்கு வாஎன்று எல்லோரும் அவனை அழைத்தபோது அவன் மறுத்துவிட்டான்.

எனக்கு ஏன்அம்மா இப்போது கல்யாணம் இன்னும் கொஞ்சக் காலம் நான் உழைக்க வேண்டும். உழைத்தபிறகு யோசிப்போம். என்று கூறியவனை அவன் தம்பி கிருபாந்தன் தான் வலுக்கட்டாயமாக ஒற்றைக் காலில் நின்று சம்மதிக்க வைத்து பெண்பார்க்க அழைத்துப் போனான்.

தேவானந்தன் இலங்கை வங்கியில் முகாமையாளராக வேலைபார்க்கிறான். கைநிறையச்சம்பளம். தம்பி கிருபானந்தனை விடவேறு சகோதரர், சகோதரிகள் யாரும் இல்லை. அவனால்தான் கரைசேர வேண்டும் என்று அவனை நம்பி அவன்வீட்டில் யாரும் காத்துக் கொண்டிருக்கவும் இல்லை. கிருபானந்தன் கூட ஆங்கில ஆசிரியனாகத்தன் பங்கிற்கு உழைத்து அவனும் தனது சொந்தக்காலில் எதற்குமே தன் அண்ணனையோ, பெற்றோரையோ எதிர்பார்க்காத நிலையில் நிற்கிறான். அப்படி இருக்கும்போது எதற்காக இன்னும் உழைக்க வேண்டும்? திருமணத்திற்குத் தயங்கவேண்டும். இவை எல்லா வற்றையும் எடுத்துக்கூறி மூளைச்சலவைசெய்து கிருபானந்தன் அண்ணனைச் சம்மதிக்க வைத்து விட்டான். அவனுக்கு பக்கபலமாக அம்மாவும் சேர்ந்து கொண்டதால் தேவானந்தனால் தப்பிக் கொள்ள முடியவில்லை. சம்மதிக்க வேண்டியே ஆகிவிட்டது.

பெண்பார்க்கச் சென்ற இடத்தில் வளக்கமான சம்பிரதாயப்படி எல்லாம் நடந்தது. கடைசியாக பெண்ணை இவர்கள் பெண் பார்ப்பதற்காக அழைத்தக் கொண்ட வந்தபோது, தேவானந்தன் பெண்ணைப்பார்த்தும் ஒரு கணம் கண்ணிமைக்கவே மறந்து விட்டான். யார்இவள்? இப்படி ஒருஅழகா? மெழுகில் வார்த்தெடுத்த சுதந்திரதேவியைப்போல்!

தேவானந்தன் கண்ணிமைக்க மறந்தது அவன் பார்ப்பதற்காக அழைத்து வரப்பட்ட பெண்ணைப் பார்த்தல்ல. அவளைக்கரம் பிடித்து அழைத்துக்கொண்டு அருகேவந்த பெண்ணைப் பார்த்து.அழைத்து வரப்பட்ட பெண் எல்லோருக்கும் கோப்பி கொடுத்தாள். எல்லோரும் கோப்பி குடித்தார்கள். தேவானந்தனும் குடித்தான். தோழிபோல கோப்பி கொடுத்தவளுக்கு அருகே அவனுடைய கண்களை ஒரு கணம் இமைக்க விடாமல் செய்தவளை, அவனுடைய மெழுகுச் சிலையை ஓரக்கண்ணால் கள்ளப்பார்வை பார்த்தபடியே.

வந்துகோப்பி கொடுத்த பெண் போய்விட்டாள். கூடவந்தவளும் கூடிக்கொண்டுபோய்விட்டாள். விடைபெறும்நேரம் வந்ததும் பெண்ணைப்பிடித்ததா? என்று பெண்வீட்டின் சார்பாக பெண்ணின் அப்பா கேட்டார். எல்லோரும் தேவானந்தனைப் பார்த்தார்கள் அம்மா வீட்டிற்குப் போய் முடிவு செய்வோம் என்று தேவானந்தன் கூறினான். அவசரப்படவோ அவசரப்படுத்தவோ முடியாது. வீட்டிற்குப் போய் அறிவிக்கிறோம் என்று தேவானந்தனின் அம்மா கூறவே, பெண்வீட்டாரும் ஆமோதித்தார்கள் தேவானந்தன்குடும்பம் விடுவந்து சேர்ந்தது.

வீடு வந்ததும் தேவானந்தன் தன் உள்ளக்கிடக்கையை, தன்விருப்பத்தைக் கூறினான். எல்லோரும் திகைத்தார்கள் வீடு கொஞ்ச நேரம் அமர்க்களப்பட்டது.

இது என்ன நியாயம்? பார்க்கப் போனது ஒருத்தியை வேண்டும் என்று இன்னொருத்தியை கேட்கமுடியுமா? என்று அப்பா குதித்தார். கிருபானந்தன் என்ன செய்வது என்று புரியாது திகைத்தான். தேவானந்தன் முடிவாகக் கூறிவிட்டான் கல்யாணம் செய்வதென்றால் நான் விரும்புவளை கொண்டு வந்தால் செய்வேன். இல்லையென்றால் எனக்கு கல்யாணமே வேண்டாமென்று. கடைசியாக அம்மா எல்லோரையும் ஒருவழிக்கு கொண்டு வந்தாள்.

அவன் கேட்பதில் என்ன தப்பு இருக்கிறது. அவன் அந்த இரண்டாவது பெண்ணை விரும்புகிறான். அவன் விருப்பத்தை புரோக்கர் மூலம் ஒருமுறை பெண் வீட்டாரிடம் கேட்டுப்பார்ப்போம் என்று அம்மா அவன் பக்கமாக நின்று வாதாடினாள்.

புரோக்கர் வரவழைக்கப்பட்டார். சங்கதி அவருக்குச் சொல்லப்பட்டது. புரோக்கர் ஒருகணம் திக்குமுக்காடிப் போய விட்டார். அவர்கள் பார்க்கப் போனது அந்தக்குடும்பத்தின் மூத்தபெண்ணையாம். அவள் பெயர் கஸ்த்தூரியாம். இப்போது தேவானந்தன் வேண்டும் என்று கேட்பது அந்தக் குடும்பத்தில் இரண்டாவது பெண்ணாம். அவள் பெயர் காவேரியாம் மூத்தவள் இருக்க இளையவளை எப்படிக் கேட்பது என்று புரோக்கர் தயங்கியபோது, இதில் என்ன பிழை இருக்கிறது இப்போது காலம் மாறிவிட்டது எத்தனையோ இடங்களில் இப்படி மூத்தவளைப் பார்க்கப் போய் இளையவள தெரிவு செய்யப்பட்டு கல்யாணம் முடிந்திருக்கிறது.ஒரமுறை கேட்டுத் தான் பாருங்களேன் என்று கூறி அம்மா புரோக்கரை தொண்டைப்பிடி பிடித்தாள். இவன் விரும்புவது போல இந்தக் கல்யாணத்தை ஒப்பேற்றினால் இன்னும் கொஞ்சம் கூடக் கவனிப்பதாகவும் அம்மா சொன்னார்.

புரோக்கரையும் ஆசை உந்தித்தள்ளியது. பெண்வீட்டை நோக்கிப்புறப்பட்டார். எல்லோரும் புரோக்கரின் வரவிற்காக படபடப்புடன் காத்திருந்தார்கள். புரோக்கர்சற்று நேரத்தில் திரும்பி வந்தார். தேவானந்தனால் நெஞ்சுப்படபடப்பை அடக்க முடியாதிருந்தது.

''அம்மா உங்கள் மகன் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிதான் நான் போய் விசயத்தைக் கூறியதும். மூத்தபெண் அழுதுகொண்டு உள்ளே ஓடினாள். இரண்டாவது பெண்ணும் தாய், தகப்பனும் திகைத்துப் போய் நின்றார்கள். ஆனால் கொஞ்ச நேரத்தில் எல்லாம் ச்ரியாகிவிட்டது. எல்லோரும் உள்ளேபோய் கொஞ்சநேரம் கூடிக்கதைத்தார், கள். கடைசியில் தாயும் தகப்பனும்வெளியே வந்து, பரவாயில்லை எங்களுக்கு சம்மதம் இளையவள் சம்மதித்துவிட்டாள்- என்கிறார்கள்''

புரோக்கர் இப்படிக்கூறிய பின்தான் தேவானந்தனின் நெஞ்சுப்படபடப்பு அடங்கியது. அவனுக்கு தான் கட்டியிருக்கும் வேஷ்டி கழன்று கீழே விழுந்தாலும் பராவாயில்லை. யுரேக்கா... யுரேக்கா என்று கத்தியபடியே வெளியே தெருமுழுவதும் ஓடித்திரிய வேண்டும் போல்இருந்தது.

பிறகென்ன எல்லாம் நல்லபடி, தேவானந்தன் விரும்பியபடி நடக்கத்தொடங்கியது. புரோக்கருக்கும்பேசியதொகைக்கு அதிகமாகவே சுளைகள் கிடைத்தன யாருக்கும் தெரியாமல். தேவானந்தன் கூடபுரோக்கரை அழைத்துச் சென்று பரவாயில்லை இருக்கட்டும்... இருக்கட்டும் என்று அவர்கூறக் கூற சுளையாக கொஞ்சம் அள்ளிக் கொடுத்தான். எல்லாமே நல்லபடி முடிந்து இப்போது தேவானந்தன் மணப் பந்தலில் ராஜாபோல இருக்கிறான. ஊரிலேயே பிர்சித்தி பெற்ற வாடகை கூடிய கல்யாண மண்டபம். எதிரே ஐயர் ஒருவர் மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது தானே என்ற தைரியத்தில் தன்எதிரேஉள்ள ஓம அக்கினியில் நெய்தெளித்து என்னவெல்லாமோ கூறிக் கொண்டிருக்கிறார். ஜெகநாதன் குழுவின் நாதஸ்வர கானம் மண்டபத்தையே கலக்கிக் கொண்டிருக்கிறது.

'நேரம் ஆச்சு பெண்ணை அழைத்து வாருங்கோ'

காவேரி வந்து மணமேடையில் தேவானந்தனுக்கு அருகே அமர்கிறாள். காவேரியே ஜிலுஜலுவென்று குளிர்ச்சியாக அருகே ஓடிக் கொண்டிருப்பது போல் இருக்கிறது அவனுக்கு. மாங்கல்யத் தட்டு பெரியோர்களதும் சபையினரதும் ஆசீர்வாதத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டு சுற்றிச் சுழல்கிறது. சுழன்று முடித்து பழையபடி மண மேடையில் முதலிருந்த இடத்திற்கு திரும்பியும் விட்டது.

''கெட்டிமேளம்... கெட்டிமேளம்''

தேவானந்தன் மாங்கல்யத்தை எடுக்கிறான். மாங்கல்யம் தந்துனானே மம ஜீவன ஹேதுனாம் என்று இப்போது அடிக்கடி சொல்லி பழக்கப்பட்டு விட்டதால் ஐயர் மந்திரத்தை சரியான முறையிலேயே உரத்துச் சொல்ல பெருமிதத்துடன் தேவானந்தன் காவேரியின் கழுத்தை நோக்கி மாங்கல்யத்தை நீட்டுகிறான்.

'ஒரு நிமிஷம்...' காவேரியின் கரங்கள் உயர்ந்து தேவானந்தனை தடுக்கின்றன. காவேரி மணமேடையை விட்டு எழுந்தும் விட்டாள். சபை திகைத்து நிற்கிறது. நாதஸ்வர வித்துவான்கள் நாதஸ்வரத்தை வாசிப்பது போன்ற கோலத்திலேயே உயர்த்திப்பிடித்தபடி இருக்கிறார்கள். ஆனால் நாதஸ்வரங்களில் இருந்து சத்தம் தான் வரவில்லை. ஐயரின் பாடோ அதைவிட திண்டாட்டமாகி விட்டது. சரியாக ஞாபகத்தில் இருந்த மாங்கல்யம் தந்துனானே - மந்திரமும் இப்போது மறந்து போய் விட்டது.

''என்ன காவேரி'' - காவேரியின் அம்மா திடுக்கிட்டு திகைத்துப் போய் கேட்கிறார்.

''அம்மா... எனக்கு இவரை விட இவரின் தம்பி கிருபானந்தனைத்தான் அதிகம் விருப்பமாக இருக்கிறது அவரைத்தான் நான் கட்டுவேன்''

''காவேரி'' - தாயாருடன் சேர்ந்து இப்போது தேவானந்தனும் அலறுகிறான்.

''சாரி மிஸ்டர் தேவானந்தன் எனக்கு உங்கள் தம்பிதான் வேண்டும். கட்டுவது என்றால் அவரைத்தான் நான் கட்டுவேன்''

''காவேரி என்ன உளறுகிறாய்'' என்று அப்பா கத்துகிறார்.

''இது என்ன நியாயம். நீ மணம் முடிக்க சம்மதித்தது என்னை இப்போது மணமேடைக்கு வந்திருப்பது எனக்காக. பிறகு ஏன் இப்படிச் சொல்லுகிறாய்'' - என்று தேவானந்தனும் கத்துகிறான்.

''தேவனந்தன் நீங்கள் சொல்வது சரிதான். நான் முதலில் உங்களை மணம் முடிக்கத்தான் சம்மதித்தேன். ஆனால் இப்போது கல்யாணக் கோலத்தில் பட்டுவேட்டி சட்டையுடன் உங்கள் தம்பியையும் கண்டபின் எனக்கு உங்களை விட அவரிலேயே ஆசை வந்துவிட்டது. ஏன் நீங்கள் கூட முதலில் என் அக்காவைத்தானே பெண் பார்க்க வந்தீர்கள். அங்கே அக்காவுடன் என்னையும் பட்டுச் சேலையில் கண்டவுடன் உங்களுக்கு என் அக்காவை விட என்மேல் கூடுதலாக ஆசை ஏற்படவில்லையா? அது போலத்தான் இதுவும். எனக்கு இப்போது உங்கள் தம்பிதான் வேண்டும்.

''ஏய் காவேரி'' தேவானந்தன் ஆத்திரம் பொறுக்க முடியாது கத்துகிறான். பொல்லால் எடுத்து அடித்தால் பரவயில்லை. இவள் சொல்லால் எடுத்து அடிக்கிறாளே.

''கத்தாதீர்கள் தேவானந்தன் என்னில் பிழை ஒன்றுமில்லையே பிறகு ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்? இப்படித்தானே அன்று அக்காவும் கத்தியிருப்பாள். நீங்கள் ஆண்மகன். அதனால் சத்தம் போட்டு கத்தமுடியும். அக்கா பெண்ணாய்ப் பிறந்துவிட்டாள். அவள் அன்று மௌனமாக எவ்வளவு கத்தினாள் என்று உங்களுக்குத் தெரியுமா? இப்போது கூட ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை. கொஞ்ச நேரம் அமைதியாக இருந்து யோசித்து ஒரு முடிவை எடுங்கள். இந்தக் கல்யாணச் செலவை வீண் போக விடாமல் ஒரே மேடையிலேயே இரண்டு கல்யாணத்தை வேண்டுமானாலும் இன்று நடத்தலாம். அல்லது எதையுமே நடத்தாமலும் விடலாம். எல்லாம் உங்கள் முடிவிலேயே தங்கியுள்ளது. நான் போகிறேன். புறோக்கர் இங்கேதான் இருப்பார். அவரிடம் உங்கள் முடிவைக் கூறியனுப்புங்கள்'' என்று சொல்லிவிட்டு காவேரி போகிறாள். ஐயர் திருதிரு வென்று விழித்துக்கொண்டிருகிறார். தனது கூலி கிடைக்குமா? கிடைககாதா? என்ற கவலை அவருக்கு.

''கைகொட்டிச் சிரிப்பார்கள்
ஊரார் சிரிப்பார்கள்
விளையாட்டுக் கல்யாணமே
வெறும் விபரீத உறவாகுமே''

சே... இந்த ஜெகநாதன் இந்த நேரம் பார்த்து இப்படி இந்த அபூர்வ ராகத்தை வாசிக்கிறானே இவனை யார் இப்போது இதை வாசிக்கச் சொன்னது!

(யாவும் கற்பனை)

## புதுக்கவி

# ஆங்கில, கணித, விஞ்ஞான பாட பெறுபேறுகளில் வீழ்ச்சி

### கல்வி அமைச்சு கலந்தாலோசனை

(கொழும்பு)

கடந்த பல வருடங்களாக கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், எண்கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மிகக் குறைந்த புள்ளிகளையே மாணவர்கள் பெறுகின்றமை குறித்து அண்மையில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட கலந்தாலோசனைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த 5வருடங்களின் க.பொ.த. சாதாரண தரப் பெறுபேறுகளை மீளாய்வு செய்தபோது ஆங்கில பாடத்திற்கு தோற்றிய 3லட்சத்து 30ஆயிரத்து 835 பேரில் 78ஆயிரத்து 876பேர் மாத்திரம் சித்தியடைந்துள்ளனர்.

எண்கணித பாடத்திற்கு தோற்றிய 3இலட்சத்து 25 ஆயிரம் பேரில் ஒரு இலட்சத்து 30ஆயிரத்து 267பேர் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை, இதற்கான காரணங்களைக் கண்டறியும்படி கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அமைச்சின் அதிகாரிகளைப் பணித்திருப்பதற்கிணங்க அவர்கள் முன்வைத்த காரணங்கள் வருமாறு,

எல்லா மாணவர்களும் வகுப்பேற்றப்பட வேண்டும் என்ற ஆணையின்படி மிகவும் தரம் குறைந்த மாணவர்களையும் தரம் உயர்த்துதல், அதிபர்களின் தரம், குறைந்த முகாமைத்துவமும் திட்டமுமற்ற முறையில் நடைபெறும் ஆசிரிய இடமாற்றம் மற்றும் முக்கிய பாடங்களுக்கு அதிக நேரம் இம் அளித்தல் ஆகியவற்றை பரிந்துரை செய்துள்ளனர்.

மேலும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பெருமளவு பற்றாக்குறை நிலவுதலும் இதற்குரிய காரணமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணங்கள் எட்டு மாவட்டங்களையும் 24கல்விக் கோட்டங்களையும் கொண்டுள்ளன. இங்குள்ள ஆயிரத்து 823பாடசாலைகளுக்கு 3ஆயிரத்து 522 ஆங்கில ஆசிரியர்கள் தேவை. ஆனால் ஆயிரத்து 578 ஆசிரியர்கள் மட்டுமே தற்போதுள்ளனர்.

தமிழ் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளுக்கு ஆயிரத்து 618 ஆசிரியர் தேவையான நிலையில் ஆயிரத்து 151ஆசிரியர்களே உள்ளனர்.

அத்துடன் ஆயிரத்து 388 ஆசிரியர் தேவையான உயர்நிலைப் பிரிவில் 66ஆசிரியரகளே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# வன்முறைச் சம்பவங்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

### மட்டு. துணை அரசியல் பொறுப்பாளர்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டும் வன்முறைச சம்பவங்கள அதிகரித்து வருவதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளரும், ஊடகத தொடர்பாளருமான கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தை விரும்பாத சில தீய சக்திகளே இவற்றின் பின்னணியில் செயற்படுகின்றன.

இவ்வன்முறைச் சம்பவங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் என பழியைச் சுமத்தி சமாதான நிலைமைகளை குழப்ப முயலும் சக்திகள் குறித்து தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வன்முறைச் சம்பவங்கள் யாவும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே இடம்பெற்று வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் நிராயுதபாணிகளாக மேற்கொண்டு வரும் அரசியற் பணிகளைக் குழப்பியடிக்க முற்படும் தேசவிரோத கும்பல்களே இவ்வாறான நாசகார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

சமாதானப் பேச்சுக்களில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தற்காலிகமாக ஒதுங்கினாலும் போர் நிறுத்தத்தைக் கைவிடவில்லை. விழிப்பாக இருந்து தீயசக்திகளை மக்கள் இனங்காண வேண்டும்.

மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்ற புளொட் உறுப்பினர் மீதான குண்டுத் தாக்குதலுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை தமிழ மக்கள் உணர்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# ஜனாதிபதி — இம்தியாஸ் இடையில் எழுந்துள்ள புதிய சர்ச்சைகள்

(கொழும்பு)

ஜனாதிபதி குமாரதுங்காவுக்கும், மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்காருக்கும் இடையில் புதிய சர்ச்சைகள் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்கும் விவகாரத்தில் சட்டமா அதிபர் தனது தீர்ப்பை ஜனாதிபதிக்கு அனுப்பியிருப்பதாக செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தெரிவித்துள்ளதுடன், தீர்ப்பின் விபரத்தை ஜனாதிபதியே வெளிப்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஆனால், ஜனாதிபதி சட்டமா அதிபரிடம் தீர்வு எதனையும் நாடவில்லை என்றும், அதனால் தீர்வு பற்றிய விபரங்களை வெளியிட வேண்டிய தேவையெதுவும் இல்லை என்றும் ஜனாதிபதி செயலாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரிவித்த ஹரீம் பீரிஸ்,

அமைச்சர் சட்டமா அதிபரிடம் தீர்வொன்றை கோரியிருப்பின் அவர் அதனை சட்டமா அதிபரிடமிருந்து பெறமுடியும் என்றார்.

ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் தான் மேற்படி விவகாரத்தை பிரதமரிடம் எடுத்து விளக்கியதாகவும் பின்னர் ஜனாதிபதி தனக்கு எழுதிய கடிதத்திற்கு பதில் அனுப்பி வைத்ததாகவும் செய்தியாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது கடிதத்தில் தனது அறிவித்தலை வரத்தமானியில் வெளியிடுமாறு அரசாங்க அச்சகருக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொண்டிருந்தார். அத்துடன், அச்சிட்டபின் அச்சிட்டதை உறுதி செய்யும் விதத்தில் தனக்கு 50 பிரதிகளை அனுப்பிவைக்குமாறு கேட்டிருந்தார்.

ஜனாதிபதி தனக்கு சட்டமா அதிபர் அனுப்பி வைத்த தீர்வை தெரிவித்தாலே கஸட்டை அச்சிடுவதற்கான உத்தரவை தான் பிறப்பிக்க முடியும் என்றும் கூறியுள்ளார்.

வர்த்தமானி மூலமாக வெளிவராவிட்டாலும் ஜனாதிபதி விடுத்திருக்கும் ஒரு உத்தரவு சட்டரீதியானது என்று பொ.ஐ.மு. தலைவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் உத்தரவை பிறப்பிக்கும்படி என்னிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டிருக்கிறார். இது ஏன்? இவ்வாறு அமைச்சர் பாக்கீர் மாக்கார் கேள்வி எழுப்பியுள்ளார். (உ)

# ஈராக்கை கட்டியெழுப்ப இலங்கையின் உதவி

## கோருகிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

யுத்தத்தின் பின் சின்னாபின்னமாகியுள்ள ஈராக்கினைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை வர்த்தகர்களின் உதவியை அமெரிக்கா அரசு நாடியுள்ளது.

இலங்கையிலுள்ள பெரிய வர்த்தகர்கள் தமது வர்த்தக முதலீடுகளை ஈராக்கில் மேற்கொள்வதன் மூலம் சிதைந்து போன ஈராக்கை கட்டியெழுப்பமுடியும் என அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார.(உ-5)

# பல்கலைக்கழக மானியங்கள் ஆ.கு.வின் முடிவுக்கு துணைவேந்தர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

இவ்வருடம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெறுபவர்களுக்கு இவ்வருடமே பல்கலைக்கழக அனுமதிகளை வழங்குவது என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முடிவிற்கு துணைவேந்தர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

காத்திருப்போர் பட்டியலிலுள்ளவர்களையும் அண்மையில் நடைபெற்ற பரீட்சையில் தகுதி பெற்றவர்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்வதால் வளப்பற்றாக்குறை ஏற்படும்.

வசதிகளை அதிகரிக்காமல் அதிக மாணவர்களை சேர்த்துக் கொள்வதனால் நிலைமை மேலும் மோசமடையும் என்று ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தர் டி.எஸ்.எபிராவத்த தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது நிதிப்பற்றாக்குறை, விரிவுரையாளர்களின் பற்றாக்குறை என்பன உள்ளதாகவும், விடுதி, ஆய்வுகூட வசதிகளும் இல்லாமல் இருப்பதாகவும் தெரிவித்த அவர்,

கண்மூடித்தனமான நடவடிக்கையால் பல்கலைக்கழகங்களில் மேலும் இடப்பற்றாக்குறை ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.

இதே கருத்தையே ரஜரட்ட பல்கலைக்கழக துணைவேந்தரும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாணவர் எண்ணிக்கையை அதிகரித்தல் என்ற முடிவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து துணைவேந்தர்களின் குழு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. (உ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாநகரசபை ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு ராஜகிரியவில் உள்ள தேர்தல் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. (தி-4)

## ஐஸ் தொழிற்சாலைப் புனரமைப்பு

# உடன் நடைமுறைப்படுத்த ஒஸ்ரின் உத்தரவு

(கொழும்பு)

குருநகர் ஐஸ் தொழிற்சாலையை புனரமைப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதியை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதுவிடயம் தொடர்பான உத்தரவுக் கடிதம் கடந்த 9ஆம் திகதி ஒஸ்ரின் பெர்னாண்டோவினால் இராணுவத் தளபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஐஸ் தொழிற்சாலையை கட்டுவதற்கான அனுமதி கடந்த ஆண்டு வழங்கப்பட்ட போதும் அது முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.

இதனால் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது. எனவே இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறும், ஒஸ்ரின் பெர்னாண்டோ அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தின் பிரதிகள் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், புலிகளின் பொருளாதார நிபுணர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (த)

## திருட்டு பிடிபட்டது

(கொடிகாமம்)

நெல்லியடியில் திருடியவர் கொடிகாமத்தில் சிக்கினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் காலை நெல்லியடிப் பகுதியில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றவர் அன்றைய தினமே அதனைக் கொடிகாமத்தில் உள்ள நகைக் கடையொன்றில் விற்க முனைந்தார்.

இவரது நடவடிக்கையில் சந்தேகமுற்ற பொதுமக்கள் கொடிகாமப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததன் பேரில் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து மேற்படி திருட்டு நபரை மடக்கிப் பிடித்தனர்.(உ-40)

## குமுதினிப்படகு படுகொலை

# நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று மாவிலித்துறையில் இடம்பெற்றன

(நெடுந்தீவு)

1985ஆம் ஆண்டு நெடுந்தீவுக் கடலில் வைத்து 35 பொதுமக்கள் இலங்கை இராணுவத்தினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நினைவு நாள் நிகழ்வுகள் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் பிரதிநிதி கணேசலிங்கம் தலைமையில் நெடுந்தீவு மாவிலித்துறையில் நேற்று இடம்பெற்றன.

இதனையொட்டி நெடுந்தீவு சீக்கிரியான் பள்ளத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பொது ஊர்வலம், மாவிலித்துறையை அடைந்து அங்கிருந்து குமுதினிப் படகு மூலம் பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட இடத்தை அடைந்தது.

அங்கு நடுக்கடலில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டவர்களில் ஒருவரான நிர்மலாதேவியின் தந்தையார் பசுபதி ஈகச்சுடரினையும், கொலை செய்யப்பட்ட 6 மாதக் குழந்தையின் தாயார் அன்னலஷ்மி பொதுச் சுடரினையும் ஏற்றிவைத்தனர்.

பின்னர் குமுதினிப் படகுமூலம் கரையை வந்தடைந்த மக்கள் மீண்டும் ஊர்வலத்தில் மாவிலித்துறையில் உள்ள நினைவுத் தூபியை வந்தடைந்தனர்.

அங்கு யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், நெடுந்தீவு பொறுப்பாளர் கண்ணன், வெகுஜன ஒன்றியத்தின் தலைவர் கனகலிங்கம் மற்றும் மதகுருமார் ஆகியோர் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன. (தி-117)

## இயற்கை அனர்த்தம்

# மட்டு. மாவட்டத்தில் 4 ஆயிரம் வீடுகள் சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் வீசிய புயல் காற்றினால் 4 ஆயிரம் வீடுகள் சேதமடைந்திருப்பதாக சமூக சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் சேதமுற்ற வீடுகள், உடமைகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க சமூக சேவைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச்சேதவிபரங்கள் தொடர்பான தகவல்களை உடன் அறியத்தருமாறு மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். (தி)

## அதிபர்கள் கூட்டம்

(கோப்பாய்)

யாழ். வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாடசாலைக் குழு மேற்பார்வை சம்பந்தமான மீளாய்வினை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் மேற்கொள்ளவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-79)

## பொதுக் கூட்டம்

(மானிப்பாய்)

வலி தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான வருடாந்த பொதுக் கூட்டமும் உள்ளூராட்சி வாரம் சம்பந்தமான முக்கிய கலந்துரையாடலும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இன்று மு.ப. 10 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-232)




ஒரே இலக்கத்தில் சிக்கிய இரு வாகனங்கள் இவைதான். இதைக் கண்டுபிடித்த போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸார் அருகில் காணப்படுகின்றனர்.
படம் : க.பவன்



சார்ஸ் அச்சம் காரணமாக அவசர அவசரமாக வீடு புறப்படும் , யாழ். ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெற்ற ஒருவரையும், சார்ஸ் பீதியால் முகத்தை கைக்குட்டையால் மூடியிருக்கும் ஒருவரையும் படத்தில் காணலாம்.
படம் : க.பவன்

# பதற்ற நிலையைத் தணிப்பது பற்றி ஜனாதிபதி - கதிர்காமர் பேச்சு

(கொழும்பு)
அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்கும் முயற்சியால் எழுந்துள்ள நெருக்கடி பற்றியும் வேறு தேசியப் பிரச்சினைகள் தொடர்பாகவும் செவ்வாய் மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமரும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டடை விளக்கும் கடிதம் ஒன்றும் இச்சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக லக்ஸ்மன் கதிர்காமர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது சந்திப்பு வழமை முறையானது. நாம் பல பிரச்சினைகள் பற்றி இச்சந்திப்பின்போது கலந்துரையாடியுள்ளோம்.

சமாதானப் பேச்சுக்களிலிருந்து புலிகள் விலகியிருப்பது,சதீஸ் நம்பியாரின் விஜயம்,வடக்கு-கிழக்கு நிலைமை,சமாதான நடவடிக்கைகள் பற்றியே நாம் பேசியுள்ளோம்.

அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம் பற்றி ,வெசாக் கொண்டாட்டங்களில் பின்னர் பிரதமர் ஜனாதிபதிக்கு பதிலளிப்பார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும்,அபிவிருத்திலொத்தர் சபை தொடர்பில் எழுந்துள்ள பதற்ற நிலையைத் தணிப்பது பற்றியே இருவரும் தனிமையில் பேசியதாகவும் சமரசத் தீர்வொன்று விரைவில் ஏற்படுத்தப்படும் என்றும் ஊர்ஜிதம் அற்ற செய்திகள் தெரிவித்துள்ளன. (உ)

## வெசாக் பந்தல்கள் அமைப்பு

(திருநெல்வேலி)
வொசாக் பண்டிகையை நேற்று படையினர் பொதுமக்களுக்கு உணவுப்பண்டங்கள், குளிப்பானங்களை வழங்கிக்கொண்டாடினர்.

ஏ-9 வீதியில் மிருசுவில், பளை, கொடிகாமம் பகுதிகளில் இவ்வாறு குளிர்பானம் மற்றும் கிரிபத் என்பன வழங்கப்பட்டன.

இப்பகுதிகளில் பெருமளவு வெசாக் கூடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆரியகுளம் சந்திப பகுதியில் வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (உ-43)

## விபத்தில்3பேர்பலி

(கொழும்பு)
சீதுவைப்பகுதியில் நேற்றுமுன்தினம் முச்சக்கரவண்டி ஒன்று ரயிலுடன் மோதிக்கொண்டதில் 3பேர் பலியானதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து சிலாபம் நோக்கிச்சென்று கொண்டிருந்த ரயிலுடன் முச்சக்கரவண்டி மோதியதனால் இவ்விபத்து ஏற்பட்டது.(தி)

# பிணக்குகளைத் தீர்ப்பதற்கு பௌத்தம் சிறந்த வழிகாட்டி

## வெசாக் வாழ்த்துச்செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)
எந்தவொரு பிணக்கையும் தீர்க்கும்



விடயத்தில் பௌத்த சிந்தனை சிறந்தஒருவழிகாட்டியாகவுள்ளது. இதன் அடிப்படையில் இனப்பிரச்சினைத்தீர்வுக்கான விடயங்களை அரசு முன்னெடுத்துச் சென்றால் நிச்சயம் வெற்றிகிட்டும்.

இவ்வாறு வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவவாழ்த்துச்செய்தியில், இலங்கை மக்கள் பௌத்தக் கொள்கை அடிப்படையில் வாழ்க்கையை புதுப்பித்துக் கொள்வது சிறந்தது.

அப்போதுதான் இலங்கையில் சிறந்த சமூகம் உருவாகும்.

கடந்தகாலத் துன்பங்களில் இருந்து மக்கள் விடுபடவேண்டுமானால் அரசாங்கம் பௌத்தக் கொள்கைகளுக்கும், சிந்தனைகளுக்கும் ஏற்ப செயற்படவேண்டும். அப்போது மலரும் சமாதானம் அனைவராலும் விரும்பப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பு,மாணவர்களுக்கிடையே கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

கட்டுரைப்போட்டி மேற்பிரிவு, மத்திய பிரிவாக இரு பிரிவுகளிலும், ஓவியப்போட்டி மேற்பிரிவு,மத்திய பிரிவு,கீழ்பிரிவு என மூன்று பிரிவுகளிலும் இடம்பெறவுள்ளது.

தமிழீழ தேசிய உருவாக்கத்தில் மாணவர்களின் பங்களிப்பு,எதிர்காலத் தமிழீழப் பொருண்மியம், நவீன அறிவியல் வளர்ச்சியில் எமது எதிர்காலம் ஆகிய விடயங்களை உள்ளடக்கி கட்டுரை ,ஓவிய ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பாடசால்ல மட்டத்தில் நடைபெற்று முதல் 3 இடங்களைப் பெறும் ஆக்கங்கள் கோட்டமட்டத் தெரிவுக்காக அனுப்பிவைக்கப்பட்டு கோட்ட மட்டத்தில் தெரிவாகும் ஆறு ஆக்கங்கள் வலய மட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, வலய மட்டத்தில் தெரிவாகும் ஆறு ஆக்கங்கள் மாவட்ட மட்டத்திற்கு தெரிவு செய்யப்படும்.

மாவட்ட மட்டத்தில் தெரிவாகும் 3மாணவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. (உ-8)

# நாட்டை தர்ம பூமியாக மாற்றுவதே என் திட்டம்

## பிரதமர் வெசாக் வாழ்த்துச் செய்தி

(கொழும்பு)
இலங்கையை தர்ம பூமியாக மாற்றும் நோக்கத்துடனேயே சமாதான முயற்சிகளை மனப்பூர்வமாக முன்னெடுத்து வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



வெசாக்பண்டிகையை முன்னிட்டு பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் புத்த பகவான் காட்டிய வழியில் செயற்பட்டால் நிரந்தர சமாதானத்தை அடைய முடியும்.

பொருளாதாரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்திய இப்போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில்,சர்வதேச நாடுகளின உதவிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று நடுக்கட்டத்தை அடையும் நிலையில் உள்ளன.

இச்சமாதான பேச்சு வார்த்தைகளின் பிரதிபலிப்பாக பொருளாதாரத்திலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனைக் குழப்பும் முயற்சிகளில் சில சக்திகள் ஈடுபட்டுவருகின்றமை தெளிவாகிறது.

ஆனாலும் புனித வெசாக் பண்டிகை தினத்தில் நாட்டில் நிரந்தர சமாதானம் மலர அனைவரும் பிரார்த்தனை செய்யவேண்டும் என பிரதமர் கேட்டுள்ளார். (தி)

# இலங்கை அரசின் வாக்குறுதிகளில் தமிழர்களுக்கு நம்பிக்கை இல்லை

## தமிழ் கார்டியன் கருத்து

(கொழும்பு)
வாய்ச்சவடால்வேறு,யதார்த்தம்வேறு.அரசின் வாக்குறுதிகளில் தமிழ் மக்களுக்கு எப்போதுமே நம்பிக்கை இல்லை,

லண்டனிலிருத்து வெளியாகும் தமிழ் கார்டியன் அண்மையில் ஆசிரிய தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் வாசிரியத்தலையங்கத்தில் மேலும்,

ஜப்பானிய சமாதானத்தூதுவர் யசூசி அகாஷி விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்ததும்,விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் நோர்வே ராஜதந்திரிகளின் வருகையும் ஓரளவு முன்னுணர்ந்து கூறும் விளைவுகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளன.

அதேவேளை,அகதிகளையும்,உளளூரில் இடம்பெயர்ந்தவர்களையும், மீளக் குடியமர்த்துவதில் அரசாங்கம் தவறியிருக்கும் நிலையில், ஒஸ்லோ சமாதான முன்முயற்சி பாரதூரமான பின் விளைவுகளை எதிர்நோக்கியிருநதது.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னியிலிருந்து வரும் செய்திகளை ஆராய்ந்தால் நிலைமை மோசமடைந்து வருவதைக் காணமுடிகிறது. இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தில் தனது நிலையை வலுப்படுத்துவதற்கு நிர்ணயம் செய்துள்ளது.

கோட்டைக்குள்ளும் அதனைச் சூழவுள்ள பகுதிகளுக்குள்ளும் நகர்வதற்கு இராணுவம் ஆயததமாகியதை எதிர்த்துப் பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் யாழ். மக்களின் உணர்வை கோடிட்டுக் காட்டுகின்றன.

அதேசமயம் இலங்கைக் கடற்படையும் படைகள் பிரிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறது. ஜப்பானில் சர்வதேச நன்கொடை வழங்குவோர் மாநாடு நடைபெற ஒரு மாதமே இருக்கின்ற தருணத்தில் முன்னரே எடுத்தாளப்படவேண்டிய பல முக்கியமான பிரச்சினைகள் இப்போது முன்னணிக்கு வந்திருக்கின்றன.

இதில் முக்கியமானது இராணுவத்தினர் வசமுள்ள தமது வீடுகளில் 10இலட்சம் மக்கள் மீளக்குடியமர முடியாமல் இடம்பெயர்ந்தும்,அகதிகளாகவும் இருக்கின்ற அவல நிலையாகும்.

சிரான் எனப்படும் உடனடி மனிதாபினமான புனர்வாழ்வு தேவைகள் பற்றிய உப குழு சமாதானத்திற்கான பங்காளித் துவத்தின் சின்னமாக விளங்கியது.விடுதலைப்புலிகள் - இலங்கைஅரசு ஆகியவற்றின் கூட்டு அமைப்பான இது,இப்போது செயலிழந்து விட்டது. .தமிழரின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் பேச்சுக்கள மூலம் கிடைத்த ஒரே ஒரு பலாபலன் இதுவாகும்.

சமாதானப்போக்கில் நம்பிக்கையை மீண்டும் நிலை நாட்ட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என விடுதலைப்புலிகளும், வடகிழக்கில் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் தமிழரின் சிரமங் களை போக்கமுடியும் என அரசும் கூறுகின்றது.

இந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இரத்தக்களரி ஏற்படுத்திய ஜனதாவிமுக்தி பெரமுன இப்போது இநதியாவின் நலன்களுக்காக நோர்வே சமாதான முயற்சிகளை கண்டிக்கிறது.

இந்த நிலை இனவிவகாரத்தில் உண்மையான நிலை என்ன என்பதை பரதிபலிக்கிறது. கோழைத்தனமான ஓர் அரசாங்கத்தால் சிங்கள பேரினவாதத்தை எதிர்த்துப் போரிட முடிய வில்லை.

நிலையான சமாதானத்துக்கு இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)




யாழ். கடற்றொழில் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியால இடம் பெற்ற பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங் கும் வைபவத்தில் கல்லூரி அதிபர் இ.சொ.ஸ்தியாம் பிள்ளை உரையாற்றுகிறார். கடல்வள விரிவாக்கல் உதவிப்பணிப்பாளர் எ. யோசெப்,மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் மற்றும் பயிற்சி வழங்கிய ஆசிரியர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம். படம்: த.பரமலிங்கம்



நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூாயில் நடை பெற்ற 2வது உலக இந்து மகாநாட்டையொட்டிய எழுச்சி நிகழ்வில் கல்லூரி அதிபர் இ.குணநாதன் தொடக்கவுரை ஆற்றுவதையும் ,மனைப்பொருளியல் பாட முதன்மை ஆசிரியர் செல்வி சி. யோகேஸ்வரி மங்கள விளக்கேற்றுவதையும் படத்தில் காணலாம்.

படம்: கோப்பாய் நிருபர்.



காரைநகர் பிரதேச சமுர்த்தி வங்கி திறப்பு விழாவில் பெயர்ப்பலகையை அரச அதிபர் செ.பத்மநாதன் திரை நீக்கம் செய்வதையும், சமுர்த்தி வங்கியை இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ். சிவபாதசுந்தரம் ,ஈழத்துச்சிதம்பர பிரதம குரு ஈஸ்வரக்குருக்கள் ஆகியோரும் இணைந்து நாடாவெட்டித் திறந்து வைப்பதனையும் படங்களில் காணலாம் . (உ-246)

## இன்று ஒரு தகவல்

# மனம் ஒரு குரங்கு!

ஒரு சந்நியாசி இருந்தார். ஒருவர் அவரிடம் போய் ''சுவாமி! உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள். உங்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்'' என்றார். சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார். ''எதையும் செய்யத்தயாராக இருக்கிறாயா?'' என்றார். ''ஆமாம்!'' என்றார் அவர். ''வாக்குக் கொடுதததன் பின்பு தயங்கக் கூடாது. தயங்கமாட்டேன்'' என்றார். ''அப்படியென்றால் உன் குடும்பம், சொத்து, வீடு, வாசல் எல்லாவற்றையும் உதறத்தள்ளி விட்டு, நாளைக்கு என்னுடன் வந்துவிடு'' என்றார் சந்நியாசி அந்த ஆள் திகைத்துப் போய் விட்டார். ''சுவாமி அந்த அளவுக்கு என் மனம் இன்னும் பக்குவமடையவில்லை இப்போது நான் நடத்திக் கொண்டிருக்கிற வியாபாரத்தை ஏற்றுக் கொள்கிற என் மகனும் இன்னும் பக்குவமடையவில்லை. இப்படி இருக்கும் போது... என்று இழுத்தார். இப்பொழுது அந்த சந்நியாசி ஒரு கதை சொல்லுகிறார்.

ஒரு குரங்கு ஒரு சபையின் ஓரமாக உட்கார்ந்து ஓர் உபந்நியாசத்தைக் கேட்டது. உடனே அதற்குத் தன்னுடைய மனது பக்குவமடைந்து விட்டதாகத் தோன்றியது. தோட்டத்துக்குப் போய் ஒரு பாறைமேலே உட்கார்ந்து ஒரு நாள் முழுவதும் ஜெபம் பண்ண வேண்டும் என்று தீர்மானம் பண்ணிவிட்டது. அதே மாதிரி போய் உட்கார்ந்து ஜெபம்பண்ண ஆரம்பித்து விட்டது. கொஞ்ச நேரத்தில் அதன் மனதிற்குள் ஒரு சந்தேகம் வந்தது. '' ஒரு வேளை நான் இப்படியே பட்டினி கிடந்து விட்டேனென்றால், நான் எனக்கு வேண்டிய இரையைத் தேட, வெளியே போய் மரத்துககு மரம் தாவ முடியாமல் போய் விடுமோ?'' என்கிற சந்தேகம்.

ஆதலினால் தொடர்ந்து ஜெபம் பண்ண முடியவில்லை. உடனே ஓடிப்போய் ஒரு மரத்திலிருந்து பழங்களையெல்லாம் பறித்துக் கொண்டு வந்து ஒரு மூலையில் அவற்றைத் தயாராக வைத்துவிட்டு அதன் பின் ஜெபம் பண்ணஆரம்பித்தது. கொஞ்ச நேரம் ஆகியது மறுபடியும் மனதில் ஒரு சந்தேகம் ''ஒரு வேளை பட்டினியால் எனது உடம்பு பலவீனம அடைந்து மூலையில் இருக்கின்ற அந்தப் பழங்களை, எழுந்து நடந்து போய் எடுத்துச் சாப்பிட முடியாமல்போய்விட்டது என்றால் என்ன பண்ணுவது? அப்படியாகிவிட்டது என்றால் அந்தப் பழங்களைப் பார்த்தே ஏங்கிப் போய் செத்துப் போவது போல் ஆகிவிடுமோ?'' என்கிற நினைப்பு வந்தது.

பயமாகப் போய் விட்டது. அழுகை வந்து விட்டது உடனே எழுந்து ஓடிப்போய் அந்தப் பழங்களை எல்லாம் அள்ளிக் கொண்டு வந்து காலடியில் வைத்துக் கொண்டது. மறுபடியும ஜெபம் பண்ண ஆரம்பித்தது. கொஞ்ச நேரம் ஆயிற்று. மறுபடியும் மனதிற்குள் ஒரு சந்தேகம் ''ஒரு நாள் பட்டினிக்குப் பின்னர் ஒரு வேளை நம்மால் கையை நீட்டிப் பழங்களை எடுக்கிற அளவுக்குப் பலம் இல்லாமல் போய் விட்டதென்றால் என்ன பண்ணுவது?'' உடனே தன்னையறியாமல் ஒரு பழத்தை வாயில் போட்டுக் கொண்டது இப்பொழுது வாய்க்குள் பழம் இருந்ததனால் வாயை அசைத்து ஜெபம் பண்ண முடியவில்லை! மனதும்அந்தப்பழத்தின் ருசியில் ஈடுபட ஆரம்பித்து விட்டது. அந்தப் பழத்தைச் சாப்பிட்டு முடித்ததும் அந்தக் குரங்கு நினைத்துப் பார்த்தது! எப்படியும் நாளைக்கு இந்தப் பழங்களை நான்தானே சாப்பிடப்போகின்றேன்: அவற்றை இப்பொழுதே சாப்பிட்டு விட்டால் என்ன? பட்டினியோடு தான் ஜெபம் பண்ண வேண்டும் என்று என்ன சட்டமா?'' என்று நினைத்துக் கொண்டு அந்தக குரங்கு எல்லாப்பழங்களையும் எடுத்துச் சாப்பிட ஆரம்பித்து விட்டது. வயிறு நிறைந்தது. ஜெபம் செய்கின்ற எண்ணம் மறைந்து போய் விட்டது. அங்கேயெ படுத்துத தூங்க ஆரம பித்து விட்டது. இது தான் அந்தச் சந்நியாசி சொன்ன கதை!

அதனால், மனதை கட்டுப்படுத்தும் செயல் அவ்வளவு சுல்பமான விஷயமில்லை. அது மிகவும் கஷ்டம். மனம் ஒரு குரங்கு மாதிரிஎன்று சொல்வது எதற்கென்றால் அவை இரண்டையும் அடக்குவது சிரமமான காரியம். ஒருவர் அப்படித் தான் மிகவும் பிரியமாக ஒரு குரங்கை வளர்த்தார் அதை முறைத்துப் பார்ப்பார். அந்தப் பார்வையைப் பார்த்தே அது அடங்கிப் போய் விடும் அப்படி ஒரு பயிற்சி. ஒரு நாள் அவரின் வீட்டுக்குப் போயிருந்தேன். நடுக் கூடத்தில் எதிருமபுதிருமாக இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். இவர் அந்தக் குரங்கையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் குரங்கு இவரையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இருவருக்கும் நடுவில் ஒரு வாழைப்பழம். அந்த வாழைப் பழத்தை எடுக்க விடாமல் பார்வையாலேயே குரங்கை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார். நான் அவரது காதோரமாகப் போய் ''என்ன ... பழத்தை எடுக்க முடியாத அளவுக்கு அந்தக் குரங்கைப் பார்வையாலேயே கட்டுப்படுத்துகிறீர்கள் போல இருக்கிறதே''என்றேன். அவர் பார்வையைத் திருப்பாமலே பதில் சொன்னார். '' அப்படி யில்லை! இப்பொழுது அந்தக் குரங்கு தான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது. பழத்தைத் தொட்டேன் என்றால் பாய்ந்து என்மேல் விழுந்து குதறிவிடும். எப்படி அந்தப் பழத்தை எடுப்பது என்று யோசனை பண்ணிக கொண்டிருக்கிறேன்.'' என்றார் அவர்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# தமிழர் தம் சொந்த மண்ணை ஆளத்துடிப்பதும் பயங்கரவாதமா?

## இந்தியப் பேராசிரியர் வினா

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் தமது சொந்த மண்ணை ஆள வேண்டும் எனக் கேட்டால், உலக நாடுகள் அதனை பயங்கரவாதம் எனப் பெயர் சூட்டுகின்றன. எமது உரிமைகளைக் கேட்பது குற்றமா.?

நேற்று முன் தினம் மாலை யாழ். இந்துக் கல்லூரியில் நடை பெற்ற முழுநிலாநாள் கருத்தரங்கில் உரையாற்றிய சென்னை கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியரும் சொற்பிறப்பு ஆய்வாளருமான முனைவர் கு. அரசேந்திரன் இவ்வாறு வினாவெழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், உலகத்தில் உள்ள மக்களைக் கொன்று வேற்று நாடுகளை ஆக்கிரமித்துள்ள நாடுகளேஎமது போராட்டத்துக்கு பயங்கரவாத முத்திரை குத்தியுள்ளன.

தமிழனுக்கு தனிப் பேரரசு ஒன்று அமையும் போது தான், தமிழனையும், தாய் மொழியான தமிழ்மொழியையும் வளர்க்க முடியும்.

முன்னர் ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் ஆங்கிலம் பேசப்பட்டது. அதைப்போலவே தமது சுய இராட்சியத்தில் தமிழைப்பேசவேண்டும் என்ற ஆசைகொண்டவர்கள் ஈழத்தமிழர்கள்.

தமிழீழத்தைப் பொறுத்த வரையில் இரண்டு சொத்துக்கள் உள்ளன. ஒன்று தமிழ் மண் மற்றையது தமிழ் மொழி ஆயினும், சிங்களமொழியினை எமது மக்களைப் படிக்கும் படி வற்புறுத்துகிறார்கள். இதற்கு ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

நாம் ஒரு நல்ல தலைவனைப் பெற்றிருக்கின்றோம். அவனுடைய காலத்தில் தமிழ் அரசை உருவாக்காவிட்டால், அடுத்து வரும் எமது தலைமுறைக்கு ஒரு அரசு இல்லாமல் போய்விடும்.

தமிழர்கள் வலிமையாக உள்ள இவ்வேளையிலேயே எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

தமிழ் நாடும், தமிழீழமும் தமிழனுக்கே சொந்தமானவை. அதனைப்பெற எமது தலைவனுக்கு வலிமை சேர்ப்பது தமிழராக்கப்பட்ட அனைவரது கடமையுமாகும் என்றார். (உ-7)

# சந்திரிகாவின் முடிவு சட்டப்படியானது

## ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்றமை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா எடுத்த முடிவு சட்டப்படியானதே என்று ஜனாதிபதியின் சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் சம்பந்தமான அறிவித்தல் வர்த்தமானி மூலம் வெளிவரவேண்டுமென்பது கட்டாயமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் கூறுகையில், அரசியல் அமைப்பின் 44வது பிரிவு இதனை தெளிவாக வலியுறுத்துவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதியின் ஊடகப பிரிவின் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸும் முன்னர் இதே கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-8)

### கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(நெல்லியடி)

கரவெட்டி கிழக்கு இராஜ கிராம், கரவெட்டி விக்கினேஸ் வராக் கல்லூரிவீதி. கிராய் பிள்ளையார் ஆலயச்சூழல் மற்றும் அம்ரம் வெளி ஆகிய இடங்களில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களால் பொது மக்கள் பெரும் தொல்லைகளை எதிர் நோக்குகின்றனர். (உ-44)

## வவு.மாவட்டத்தில்

# 64ஆலயங்களின் புனரமைப்புக்கு நிதி

(வவுனியா)

வவுனியாவில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 64ஆலயங்களுக்கு அமைச்சர் தி.மகேஸ்வரன 2மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார்.

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் உள்ள 44ஆலயங்களிற்கும், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவில் உள்ள 16ஆலயங்களுக்கும் செட்டிக்குளத்திலுள்ள 4ஆலயங்களுக்குமே இந்நிதி வழங்கப்பட்டது.

வவுனியாவில் நடைபெற்ற இராண்டாவது உலக இந்து மாநாட்டு நிகழ்வில் வைத்து இவர்களுக்கான காசோலைகளை அமைச்சர் மகேஸ்வரன் வழங்கினார். (உ-5)

## இராசி பலன்

16.05.2003
(வைகாசி 2வெள்ளி)
பூரணை மு.ப 9.52வரை
விசாகம் பி.ப.1.43வரை
இராகுகாலம 10.23-11.53
சுபநேரம் 5.53-7.23
வைகாசிவிசாகம்

**மேடம்**
எதிர்பாராதஅச்சம், உறவினர் வெறுப்பு, காரியதாமதம், உடல்நலக்குறைவு

**இடபம்**
சௌக்கிய விருத்தி,நண்பர்கள் சந்திப்பு, தெய்வதரிசனம், காரியநன்மை.

**மிதுனம்**
காரிய சித்தி, உறவினர்வருகை, சுவாரஸ ஜம், தொழில்சிறப்பு.

**கடகம்**
வியாபாரவிருத்தி, குடும்பக்கவலை, முயற்சி தாமதம் பெரியோர்ஆதரவு.

**சிங்கம்**
வாகனசுகம்,மனப்பயம், புதிய திருப்பம், எடுத்தகாரியம் தாமதமாகும்.

**கன்னி**
பிரயாண நன்மை ,நல்ல வருமானம், காரியசித்தி,பிறர் உதவி.

**துலாம்**
பெரியோரால் மதிக்கப்படுதல்,, சயன சுகம், நண்பர் உதவி, புதிய முயற்சி.

**விருச்சிகம்**
தெய்வ சிந்தை,பெரியோரால் மதிக்கப்படுதல், தேக ஆரோக்கியம், பயண சுகம்.

**தனுசு**
காரியதாமதம் ,அமைதிக் குறைவு, வேலைக் கஷ்டம், அதிகசெலவு.

**மகரம்**
தெய்வ தரிசனம், சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம்,அதிக வருமானம்.

**கும்பம்**
பிறர் உதவி,எடுத்தகாரியம் கைகூடும், அதிக பிரயாசை,அதிகாரம்.

**மீனம்**
புதிய சிந்தை, முயற்சி கைகூடும், தந்தைவழி உறவு,பிரயாணம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# இயந்திர வள்ளங்களின் சாரதிகளுக்கு லைசன்ஸ்

(குருநகர்)

கடற்றொழிலில் ஈடுபடும் இயந்திர வளங்களின் சாரதிகளுக்கு புதிதாக லைசன்ஸ் வழங்கும் திட்டத்தை நடை முறைப்படுத்த கடற்றொழில் அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

கடற்பரப்பில் எந்த வேளையிலும் கடற்படையினர் சோதனைகளை நடத்துவதற்கும் சந்தேகத்திற்கிடமாக நடமாடுபவர்களை இலகுவாகக்கண்டறிய 'லைசன்ஸ்'முறை உதவுமென்றும் அமைச்சு வட்டாரங்களில் நம்பப்படுகிறது (உ-74)

## ஊவா மாகாணத்தில்

# 136 பேருக்கு ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

ஊவா மாகாணத் தமிழ்ப் பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 136பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் ஊவா மாகாணக்கேட்போர் கூடத்தில் வைத்து முதலமைச்சர் ஏ.எம்.புத்துதாஸாவினால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், ஊவா மாகாண சபை உறுப்பினர்கள் ரீ.வி.சென்ன, வே.குமரகுருபரன், எம்.எம்.முபாரத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில்,பேசிய முதலமைச்சர்,ஊவா மாகாணத் தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகளை தீர்க்கும் முகமாக மேலும் 450பேருக்கு அடுத்த இருமாதங்களில் ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (த-3)

### சட்டமா அதிபரின் ஆலோசனை எதிர்பார்ப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையின் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திகா குமாரதுங்கா ஏற்பது தொடர்பான வர்த்தமானி வெளியீட்டுக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்திருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் பொறுப்பைத் தான் ஏற்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு ஜனாதிபதி சந்திரிகா ஊடகத்துறை அமைச்சர் பாக்கீர் மாக்காருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தினை அடுத்தே சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியிருப்பதாக அமைச்சர் இம்தியாஸ் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (வ)

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை
– குறள்

# வலம்புரி

## விட்டுக் கொடுப்பு அவசியம்

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்ததையடுத்து,ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தேவையற்றதொன்றாகவே கருதப்படுகின்றது.நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும்,பாராளுமன்ற அதிகாரம் கொண்ட அரசும் இரு வேறு கட்சிகளாக இருக்கும் போது இத்தகைய அதிகாரப் பிரயோகங்கள் ஏற்படுவது வழமையே.எனினும் இதற்குள் ஓர் சுமுகமான தீர்வைக் காண முற்படுவதே நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கும்.

ஆனால்,இது விடயத்தில் இருதரப்பும் விடாதே பிடி எனக் கடும் போக்கை கடைப்பிடிப்பது,முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்.அபிவிருத்தி லொத்தர் சபையின் தேறிய இலாபம் ஜனாதிபதிக்கே மாற்றப்படுவதாக இருந்தால் இச் சபையை ஜனாதிபதி தனது நிர்வாகத்திற்குள் எடுத்துக் கொள்வதில் பாரதூரமான தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால்,ஐக்கிய தேசிய முன்னணி அரசு இதனைக் கௌரவக் குறைவாகக் கருதுகிறது.லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதை கௌரவக்குறைவாகக் கருதி ஜனாதிபதிக்கு எதிராக அரசு செயற்படுமாயின் அது அரசினால் சாதிக்கப்பட வேண்டிய மிகப் பெரியதொரு சமாதான முயற்சியை தோல்வியடையச் செய்து விடும்.

எனவே தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை அரசு நிறைவேற்ற வேண்டுமாயின் பாரிய விட்டுக் கொடுப்புக்களையும் தியாகங்களையும் செய்துதான் ஆக வேண்டும்.

மாறாக சாதாரண லொத்தர் சபையைப் பெரிது படுத்தி ஜனாதிபதி மீது அரசு தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துமாயின் அதன் விளைவு பாராளுமன்றக் கலைப்புக்கே வழிவகுக்கும்.

ஆக,இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமாயின்,ஜனாதிபதியுடன் நல்லுறவைப் பேணுவது அரசின் மிகப் பெரிய பணியாக இருக்கும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை புறந்தள்ளிவிட்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் ஒரு போதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.இது ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு மட்டுமல்ல; பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமாகவும்,ஐ.தே.முன்னணியைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாக இருந்தாலும் இதே நிலை தான்.

**இதனை மறந்து யார் செயற்பட்டாலும் சமாதானம் மலர்வது கடினமானதே.நாட்டின் இரு பிரதான கட்சிகளும் எப்போது ஒன்று சேர்ந்து இனப் பிரச்சினையை தீர்க்க முற்படுகின்றனவோ அன்று தான்** இந்த நாட்டில் சமாதானத்தை நிலை நிறுத்த முடியும். இதுவே யதார்த்தமாகும்.

# குலமோ,கோத்திரமோ ஒருவரை உயர்த்தாது அறநெறி வாழ்வே அனைத்திலும் உயர்வானது

வட இந்தியாவிலுள்ள கோசல நாட்டின் வடபால் அமைந்த கபில வஸ்து நகரில், வீரமும், வலிமையும் மிகுந்த சாக்கிய குலத்தில் சுத்தோதன மன்னரின் பட்டத்துக்குரிய இளவரசராகப் பிறந்த சித்தாத்தர் என்ற இயற்பெயரையும் கௌதமர் என்ற குடும்பப் பெயரையும் கொண்டவரே ஞானம் பெற்ற பின்னர் புத்தர் என்று போற்றப்பட்டவராவார். புத்தர் என்றால் பூரண ஞானம் பெற்றவர் என்பது பொருள.தனது அன்பு மனைவி யசோதரையையும் மைந்தன் இராகுலனையும் உற்றார் உறவினர்களையும் தனது 29வது வயதில் விட்டுப் பிரிந்து,நாடு,நகரம், ஆட்சியையும் கைவிட்டு வனத்துக்குச்சென்று ஆறு ஆண்டுகள் அருந்தவமியற்றி தனது 35வது வயதில் ஞானோதயம் பெற்றார்.புத்தகாயை என்னுமிடத்தில் ஓர் அரச மரத்தடியிலிருந்து ஞானம் பெற்ற இவர், உலக மக்கள் படும் துன்பங்களைக் கண்டு மனம் இரங்கினார். காசி நகருக்கு நேராகச் சென்று தான் கண்ட தர்மத்தை முதன் முதலில் உபதேசித்தார். அதன் பிறகு அவர் 45 ஆண்டுகள் வாழ்ந்திருந்து நாடும்,நகரும்,காடும் மலையும் கால்நடையாகச் சென்று, மக்களுக்கும்,மன்னர்களுக்கும் உபதேசம செய்து ,அறஆளியை உருட்டிக் கொண்டிருந்தார்.

### பௌத்தம் உருவானது

இந்துமதத்தில் உதித்தவரான புத்தர் அக்காலத்தில் அம்மதத்திலிருந்த சீர்கேடுகளைக் கண்டு சித்தம் கலங்கினார். உயிர்ப்பலியிடுதல்,சாதிவேறுபாடுகள் சொல்லித் தீண்டாமை பாராட்டுதல், ஏற்றத் தாழவுகள் போன்றவற்றை முழு மூச்சாக எதிர்த்தார். சுயநலத்தை ஒழித்து, ஆசைகளையும்,வெறுப்புகளையும் அகற்ற வேண்டும். உள்ளத்தில் எல்லா உயிர்களிடத்தும் அன்பு மலர்ந்து பரிமளிக்கச் செய்ய வேண்டும்.ஒழுக்கம் என்னும் உறுதியான பாறைமீது வாழ்க்கையை அமைதத்துக் கொள்ளவேண்டும்;மெய்யறிவின் மூலம் அறியாமையைப் போககவேண்டும்.அறியாமை போனால ஆசை ஒழியும்,ஆசை ஒழிந்தால் பிறவியும் ஒழியும். நிலையான நிர்வாணப்பேறு அதாவது முத்தி கிடைக்கும் என்பனவே அவர் மக்களுக்குக் காட்டிய வழி. இக் கொள்கைகளே பிற்காலத்தில் பௌத்தமதம் உருவாக அடிப்படைகளாயின.

### அந்தணர் என்போர் அறவோர்

புத்தர் பிறப்பினால் சாதியை ஏற்றுக்கொள்ளவில்லை.'பிறப்பினால் ஒருவன் பிராமணனாவதில்லை. தாயைக்கொண்டோ,குலத்தைக் கொண்டோ ஒரு மனிதனை நான் பிராமணன் என்று கூறுவதில்லை' என்கிறார். புத்தர் தனது காலத்திலருந்த பிராமணரை வன்மையாகக் கண்டித்ததுடன்,முன்னிருந்த பிராமணரைப் புகழ்ந்திருக்கிறார். பாவத்தை ஒழித்தவன்,பற்றை அறுத்தவன்,பொறுமையுள்ளவன், தியானத்தில் இருப்பவன்,காமத்தைக் கடந்தவன்,வெகுளியைவிட்டவன் மெய்,வாய்,மனம் ஆகிய மூன்றினாலும் பிறருக்குத் துன்பம் செய்யாதவன் எவனோ அவனே பிராமணன் என்று குணத்தையே அடிப்படையாக வைத்து நோக்குகிறார்.இதனையே எம்வள்ளுவர் பெருமானும்,

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்,சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' எனவும்,'அந்தணர் என்போர்அறவோர்,மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' எனவும் கூறியுள்ளார். அவர் பிராமணர்கள் ஒழுகவேண்டிய நெறி முறைகள் பற்றிக்கூறியவற்றை 'தம்மபதம்' என்ற நூலில் விரிவாகக் காணலாம். அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்குவாம்.

### எவன் பிராமணன்?

1)எவன் தியானத்துடன் உள்ளானோ, ஆசைகளற்றவனோ, நிலையான அமைதியுள்ளவனோ, கடமைகளைச் செய்து முடிப்பவனோ, ,எவன் மாசற்றவனோ,எவன் உத்தமமான ஞானியின் முடிவான நிலையை அடைந்தவனோ அவனையே நான் பிராமணன் என்பேன்.

2) பிராமணனை எவரும் தாக்குதல் தகாது. தாக்கப்பட்ட பிராமணன் தாக்கியவன் மீது பாய்தலும் தகாது. பிராமணனைக் கொல்வோன் பழிக்கு

**வசந்தாமணாளன்**

ஆளாவான்.அத்தீயோனிடம் கோபத்தைச் செலுத்துவோன்அதிகபழிக்கு ஆளாவான்.

3) ஒருவன் பிராமணனாவது சடைத்தலையாலன்று,தன்கோத்திரத்தாலன்று,பிறப்பினாலும் அன்று .எவனிடம் சத்தியமும்,தர்மமும் நிலைத்துள்ளனவோ அவனே பிராமணன்.

4) தான் ஒரு குற்றமும் செய்யாதிருந்தும் தனக்குக்கிடைக்கும் வசைகளையும்,அடிகளையும், சிறைத் தண்டனையையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு பொறுமையே தன் ஆற்றலாகவும்,சிரத்தை,சாமர்த்தியம், ஞாபகம்,மனனம்,ஊகித்தல்ஆகிய பலங்களே தன் சேனைகளாகவும் பெற்றுள்ளவன் எவனோ அவனையே நான் பிராமணன் என்று சொல்வேன்.

5) வெகுளியை விட்டவன், கடமைகளில் கவனமுள்ளவன், ஒழுக்க விதிகளின்படி நடப்பவன், பரிசுத்தமானவன், தன்னடக்கமுள்ளவன் எவனோ,எவன் இவ்வுடலைக் கடைசி உடலாகக் கொண்டுள்ளானோ அவனையே நான் பிராமணன் என்று சொல்வேன்.

6) தாமரை இலை மேல் தண்ணீர் போலவும்,ஊசிமுனையில் கடுகு போலவும் இன்பங்களோடு ஒட்டாமல் உள்ளவன் எவனோ அவனே பிராமணன்.

7) ஆழ்ந்த ஞானமும் மேதாவிலாசமும் பெற்றவன் நன்மார்க்கத்தையும் துன்மார்க்கத்தையும்அறிந்தவன் மெய்ப்பொருளை அடைந்தவன் எவனோ அவனே பிராமணன்.

8) இலலறத்தார் துறவறத்தார் ஆகியவர்களுடன் கலந்து கொள்ளாமலும் அடிக்கடி பிறருடைய வீடுகளுக்குச் செல்லாமலும், தேவைகளைக குறைத்துக் கொண்டும் வாழ்பவனே பிராமணனாவான்.

9) நிற்பனவும்,திரிவனவுமாகிய எவ்வுயிரையும் துன்புறுத்தாமலும் வதைக்காமலும் வதைக்கக் காரணமாயில்லாமலும் எவன் உள்ளானோ அவனே பிராமணன்.

10) உண்மையே பேசுவோன் இன்சொல்லும் தெளிந்தபொருளும் விளககப்பேசுவோன் எவர் மனமும் நோகாமல் பேசுவோன் எவனோ அவனையே பிராமணன் என்று சொல்வேன்.

11) இந்த உலகத்தில் தனக்கென்று அளிக்கப்படாத எதையும் அது நெடியதோ குறுகியதோ பெரிதோ சிறிதோ நல்லதோ கெட்டதோ ஏற்றுக் கொள்ளாதவன் எவனோ அவனே பிராமணன்.

12) எவனுக்கு வேட்கையில்லையோ ஞானத்தால் ஐயங்கள் தீர்ந்து விட்டனவோ எவன் நித்தியமான மெய்ப்பொருளில் ஆழ்ந்துள்ளானோ அவனே உண்மையான பிராமணன்.

13) எவன் இவ்வுலகில் புண்ணிய பாவங்களைப் பற்றிய தொடர்புகளுக்கு அதீதமாய்ச் சென்றவனோ எவன் சோகமின்றி உணர்ச்சி வெறிகளைக் கைவிட்டுத் தூய நிலையிலுள்ளானோ அவனே பிராமணன்.

14) மானிடரின் போகங்களையும் தெய்வீகமான போகங்களையும் உதறிவிட்டு எல்லாப் பற்றுக்களிலிருந்தும் விலகியவன் எவனோ அவன் பிராமணன்.

15) எங்கும் உயிர்கள் அழிவதையும் அவைகளின தோற்றத்தையும அறிந்தவன் பற்றற்றவன் நல்வழி நடப்பவன் ஞானமுள்ளவன் எவனோ பிராமணன்.

இவ்வாறு போதனைகள் செய்து மக்களையும் நல்வழிப்படுத்திய புத்தா பெருமான் கி.மு.493ஆம் ஆணடு தமது எண்பதாவது வயதில் குசீநகர் என்னுமடத்தில் பூத உடலை நீத்துப் மகா பரிநிர்வாணம் அடைந்தார்.புத்தர் பிறந்த ஞானம் பெற்ற மகா பரிநிர்வாணம் அடைந்த நாள் வைகாசி மாதத்தின் பூரணையோடு கூடிய விசாக தினமாகையினால் அததினம்.'வெசாக்' என்று கொண்டாடப்படுகின்றது.

## காணமால் போனோர் குறித்த 5ஆம் கட்ட விசாரணை 29ஆம்திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலிருந்து 1996,97ஆம் ஆண்டுகளில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமறபோனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்த குழுவின் 5ஆம் கட்டவிசாரணைகள் இம்மாதம் 29ஆம்திகதி முதல் யூன்மாதம் 22ஆம்திகதிவரை நடைபெறவுள்ளது.

31ஆம்திகதி வலி. மேற்குப் பிரதேசசபை அலுவலகத்திலும், ஏனையநாட்களில் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திலும்இவ்விசாரணைகள் நடைபெறவுள்ளன.

இந்த விசாரணைகளை மேற்கொண்டு வரும் தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவில், செயலாளர் இக்பால் மற்றும் ஹமலஸ் பெர்னாண்டோ, ஸ்மயிப் உட்படப் பல அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றமைகுறிப்பிடத்தக்கது.

விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், ஏனையோர் கட்டம் கட்டமாக இந்த விசாரணைக்கு அழைக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## தினசரி தியானம்

# குரு பக்தி யோகம்

குருவானவர் பிரம்மமாக நிலை நாட்டப் படவேண்டியவராவர். புத்தகங்களைப் படிப்பதாலேயே ஒருவர் குருவாக முடியாது. ஒரு துறவியின் திருமுன்னர் உங்களுக்கு அமைதி தோன்றினால்,அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே, உங்களுடைய ஐயங்கள் தீர்கின்றன என்றால்,அவரை நீங்கள் குருவாக ஏற்கலாம்.

குரு நாதரிடம் குறைகளைப் பார்க்க வேண்டாம். அவரை இறைவனாகக் காணுங்கள்.அவரது ஆணைகட்கு உடனடியாகக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். உங்கள் குருநாதரின் உருவில் உங்களையே, பரம்பொருளையே நீங்கள் உணர்வீர்கள்

சுவாமி சிவானந்தர்

## நாளாந்த மருத்துவ அறிக்கை பரிசீலனை

(கொழும்பு)

உடத்தனவின்ன படுகொலை வழக்கின் 12வது எதிரி மகிந்த திஸநாயக்க, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமைக்கான, படுகையுடன் இணைக்கபபட்ட நாளாந்த மருத்துவ அறிக்கை, குற்றப்புலனாய்வுப்பிரிவினரின் பரிசீலனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விசாரணையை நடத்திவந்த மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் கொண்ட குழுவின் பணிப்புரையிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்படி, 12வது எதிரி நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பொய்க்காரணங்களை கூறி வைத்தியசாலையில் தங்கி இருந்ததாக நீதிபதிகள் குழுமுன்னிலையில்முன்னர் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, இந்நபருக்கு சிகிச்சையளித்த கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர் மற்றும் சிறைச்சாலை வைத்தியசாலை வைத்தியர் ஆகியோரிடமிருந்து வாக்குமூலங்களை பெற்றுக் கொள்ளுமாறு நீதிபதிகள் குழு உத்தரவிட்டது.

அத்துடன் எதிரியிடம் இருந்து வாக்குமூலங்களை பெற்றுக் கொள்ளகுற்றப்புலனாய்வு அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிபதிகள் குழு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இவர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் வழக்கொன்றை தாக்கல் செய்யுமாறும் நீதியரசர்கள குழு சட்டமா அதிபருக்கு பணித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (தி)

## கடந்த வருடவருமானம் 54கோடி அமெ.டொலர்

(கொழும்பு)

சர்வதேச வியாபாரம் மற்றும் வெளிநாட்டுப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையால் கடந்த வருடம் இலங்கைக்கு 54 கோடி அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்துள்ளதாக ஸ்ரீலங்காவின் மரபு முறையான சபையின் பொது முகாமையாளர் எஸ்.கோபிநாத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி நேற்றுமுன்தினம் கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

2001ஆம்ஆண்டு மொத்தவருமானத்துடன் ஒப்பிடுகையில் கடந்த வருடவருமானம் 71.3 வீதமாக அதிகரித்துள்ளது.

தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகள் காரணமாக உல்லாசப் பிரயாணிகள்,சர்வதேச வியாபாரிகள், சமாதானப்பேச்சாளர்கள் மற்றும் நடுநிலையாளர்களது வருகை அதிகரித்துள்ளது.

இதனால்,இலங்கையின் வருமானம் கடந்த வருடங்களை விட அதிகரித்துச்செல்வதை அவதானிக்க முடிகினறதெனத் தெரிவித்தார். (உ-8)

## கலந்துரையாடல்

(வேலணை)

வேலணைப்பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளையும் நாளைமறுதினமும வேலணை ப.நோ.கூ.சங்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது

இக்கலந்துரையாடலில் முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வி அறிவாற்றல் ,கல்வி போதிக்கும் நவீன முறை என்பன குறித்தும் ஆராயப்படவுள்ளன. (தி47)

# சார்ஸ் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை

# யாழ்.வைத்தியசாலையும் சில ஊடகங்களும் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துள்ளன

## வலம்புரிச் செய்தியாளரிடம் பெற்றோர் ஆதங்கம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் கடந்த திங்களன்று சுக வீனம் காரணமாக அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச் சைக்குட்படுத்தப்பட்டிருந்த சாவ கச்சேரி நுணாவில் கிழக்கைச் சேர்ந்த செல்வி யமுனா சிறீதரனின் மரணம் தொடர்பாக அவரின் உறவினர்கள் யாழ்.வைத்தியசாலை நிர்வாகத்தின் மீதும் சில செய்தி ஊடகங்கள் மீதும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவித்துள் ளனர்.

நேற்றைய தினம் எமது செய் தியாளர்கள் பிரஸ்தாப பெண்ணின் வீட்டுக்குச் நேரில் சென்று அவரின் பெற்றோர்களைச் சந்தித்து கலந் துரையாடினார்கள்.

இதன் போதே யாழ்.போதனா வைததியசாலை நிர்வாகத்தின் மீதும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி வரும சில ஊடகங்கள் மீதும் வழக் குத் தாக்கல் செய்யவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

தனது பிள்ளையைப் பறிகொடுத் தது மட்டுமன்றி,சார்ஸ் என்ற பயங் கர நோய் காரணமாகவே இறப்பு நேர்ந்ததாகக் கூறி எமது பிள்ளைக்கு இறுதி அஞ்சலி கூட செலுத்த முடி யாத நிலைக்கு யாழ்போதனா வைத் தியசாலை நிர்வாகமும் யாழ்ப்பா ணத்தில் இருந்து வெளி வரும் சில ஊடகங்களும் செய்துவிட்டன என்று பெண்ணின் பெற்றோர் கண்ணீர் மல்கக் கூறினர்.

சார்ஸ் என்று மருத்துவப் பரி சோதனைகள் மூலம் உறுதிப்படுத் தப்படாத நிலையில் சில பத்திரிகை கள் சார்ஸ் என்றே முடிவுகட்டி செய்தி வெளியிட்டமை மனித நேய மற்ற செயலாகுமென்று பிரஸ்தாபப் பெண்ணின் பெற்றோர் கவலை தெரி வித்தனர்.

கடந்த திங்களன்று தடிமன்,காய் ச்சல்,இருமல் முதுகு வலி போன்ற வற்றினால் அவதிப்பட்ட மேற்படி இளம் பெண்ணை அவரின் உறவி னர்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தி ருந்தனர்.

இவரது வீட்டில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் கனடாவில் இருந்து வந்த உறவினர் ஒருவர் தங்கியிருந்தார் என்பதை சாட்டாகக் கொண்டு இவருக்கு 'சார்ஸ்'என்ற வைரஸ் தொற்றியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்.வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.அந்த வேளையில் இவ் இளம் பெண் சார்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார் என்ற தகவல் யாழ்ப்பாணம் வைத் தியசாலையெங்கும் தீவிரமாகப் பரவியிருந்தது.

இதனையடுத்து வைத்தியசாலை நிர்வாகம் பரபரப்பும் திகிலும் அடைந் தது.இதன் காரணமாக அங்கு பணி யில் இருந்த மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் பெரும் கிலேசம் ஏற்பட்டதன் காரணமாக இவ் இளம் பெண்ணுக்குரிய சிகிச்சை வழங்குவதில் தயக்கமும்,தாமதமும் ஏற்பட்டது.

இதனால் பிரஸ்தாபப் பெண் மரணிகக நேர்ந்தது.இதனையடுத்து, இப் பெண்ணின் மரணம் தொடர் பான விசாரணைகளும்,ஆய்வுகளும் மேற் கொள்ளப்பட்ட சமயம்,இப் பெண் நிமோனியாவினாலேயே மர ணமெய்தினார் எனவும் சார்ஸ் நோயினால் மரணிக்க வாய்ப்புக் கள் இல்லை என்றும் வைத்திய சாலை வட்டாரங்களால் கூறப்பட்டது.

இதே சமயம்,இவ் இளம் பெண் ணின் நோயினை சரியான முறை யில் இனங்காணத் தவறிய நிலை யில் இவர் பயங்கரமான சார்ஸ் நோயினாலேயே மரண மெய்தினார் எனச் செய்திகளை வெளி யிட்டமை காரணமாக தமது குடும் பத்துக்கு அவமானம் ஏற்பட்டுள்ள தாக இறந்த பெண்ணின் உறவினர் கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,இறந்த பெண் 'சார்ஸ்' தொற்றினால் இறந்ததாகக் கூறப் படுவதை ஏற்கமுடியாது என வைத் தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகன் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ந-77,43)

## பாலாவின் நலனுக்கு பிரதமர் பிரார்த்தனை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு விரைவில் பூரண உடல் நலம் கிடைத்து கூடிய விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டு மென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தாமும் பிரார்த்திப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் கூறுகையில், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு துரித கதியில் உடல் நலம் கிடைத்து சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு அவர் விரைவில் திரும்புவார் என்ற நம்பிக்கை தமக்கு உண்டு என்றார். (உ)

## கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பாரிய எண்ணெய்க் களஞ்சியம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பாரிய எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி ஒன்று அமைக கப்படவுள்ளது.

சர்வதேச எண்ணெய்ச் சந்தையில இலங்கையையும் இணைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் இக் களஞ்சியத் தொகுதி அமைக்கப படவுள்ளது.

நவீன கணனி தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள இத்திட்டத்திற்கு 90 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சர்வதேச கட்டுநாயக்கா விமான நிலையத்தில் உள்ள எண்ணெய்ப் பிரிவில் 3 தாங்கிகளும் அமைக்கப்படவுள் ளன.

இவ்விமான நிலையத்தில் தற்போது 3 நாள்களுக்கு தேவை யான எண்ணெய் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்படுகின்றது. ஆனால் இத்திட்டம் மூலம் 9 நாள்களுக்கு தேவையான எண்ணெய் களஞ்சியப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (தி)

## ப.நோ.கூ.ச.கட்டடம் பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வீசிய சூறாவளியினால் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக் கட்டடம் சேதமடைந்துள்ளது.

சூறாவளியினால் கட்ட்டத்தின் கூரை ஓடுகள் தூக்கி வீசப்பட்டுள் ளன. இதனால் பல நோக்குக் கூட் டுறவுச் சங்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாவரையில் நட்டம் ஏற்பட்டு ள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(வ)

## 165 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

வெசாக் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் 165 கைதிகள் நேற்று விடு தலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக கண்டி போகம்பரை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி களே இவ்வாறு விடுதலை செய் யபபட்டுள்ளார்கள்.

வெசாக்தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி வழங்கிய பொது மன் னிப்பின் பேரில் இந்தக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அத்தியட்சகர் தெரி வித்துள்ளார். (த-3)

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்
V.S.P ஸ்ரீ ஓயில்
தயாரிப்பாளர்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

## கோஷ்டி மோதல்

(வேலணை)

வேலணை வெள்ளைக்கடற் கரைப் பிரதேசத்தில் கோஷ்டி மோதல்கள் அதிகரித்து வருவ தாக தெரியவந்துள்ளது.

வெளியிடங்களில் இருந்து பொழுது போக்கிற்காக வருபவர் களே இக்கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் இங்கு நடந்த கோஷ்டி மோதலில் இரு முஸ்லிம் இளைஞர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது (தி-47)

## மின்னல் தாக்கி ஆலயம் சேதம்

(குருநகர்)

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயம் கடந்த திங்கள் இரவு மின் னல் தாக்கி கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் ஆலயத தேர் முட்டியும் பாதிப்படைந்துள்ளது

மின்னல் தாக்கிய வேளை ஆலய த்திலிருந்த ஆலய பங்குத்தந்தை எந்தவித ஆபத்துகளுமின்றி உயிர் தப்பியுள்ளார்

அதேவேளை ஆலயச்சூழலில் 40ற்கு மேற்பட்ட இலங்கை இந்திய மீனவர்கள் அந்நேரம் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது (த-74)

### பிரதமர்...

தணிப்பது குறித்தும் இருவரும் மனம் விட்டுக் கலந்துரையாடியுள்ளனர்.

லக்ஷ்மன் கதிர்காமருடனான சந்திப்பினை அடுத்து பிரதமர் ரணில அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்று இருப்பது குறித்து முக்கிய பிரமுகர்களுடன் கலந்தாலோசித்து வருவதாகவும், இப் பிரச்சினை தொடர்பாக ஜனா திபதி எழுதிய கடித்திற்குப் பதில் அனுப்புவது குறித்தும் ஆராய்ந்து வருவதாக தெரியவருகிறது. (வ)

### கொழும்பு...

ஜோன்பீற்றசன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து எடுத்துக்கூறியுள்ளார்.

பிரதமருடனான இச்சந்திப்பின் போது அமைச்சர் மிலிந்த மொற கொட, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரும் உடனிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை ஜோன் பீற்றசன் இன்று நோர்வே பயணமாக உள்ளதாகவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் கொழும்பில் தங்கியி ருப்பார் என்றும் தெரிவிககப்ப டுகின்றது. (வ)

## யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவு நாளை முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசா லையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு நாளை சனிக்கிழமை முதல் வழமை போன்று இயங்குமென வைத் தியசாலை வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

சார்ஸ் நோய் எனச் சந்தே கிக்கப்பட்ட யுவதி அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக் குட்படுத்தப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்தார். இதனையடுத்து அதிதீவிர சிகிச்சைப்பிரிவு சீல் வைத்து மூடப்பட்டது. சீல்வைத்து மூடப்பட்ட மேற்படி சிகிச்சைப் பிரிவு தொற்றுநீக்கிகள் கொண்டு நேற்றுமுதல் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது. தொற்றுநீக்கும் பணி முடிவடைந்ததும் நாளை முதல் அதிதீவிர சிகிச்சைப்பிரிவு மீண்டும் வழமை போன்று இயங்குமென தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய சிகிச்சைப்பிரிவுகள் நேற்றைய தினம் வழமைக்குத் திரும்பின.

இதேவேளை மரணமடைந்த யுவதியின் இரத்தம் மற்றும் உடல் உறுப்புக்கள் என்பன நேற்று காலை அம்புலன்ஸ் வண்டி மூலம் ஏ-9 வீதியூடாக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (த-77,43)

### புலிகளின்..

போது புலிகளின் தலைவர் பிரபாகரன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனிடம் தொடர்ந்து வலியுறுத்திக் கூறியிருப்பதாவது.

அரசுக்கும் விடுதலைப் புலிக ளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்பட்டு ஒருவருடத் துக்கு மேலாகியும் எமது மக்களின் வாழக்கையில் இன்று வரை இயல்புநிலை ஏற்படவில்லை.

எமது மக்களுக்கான அவசர மனிதாபிமான புனர்வாழ்வு நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை. வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் கட்டுமானப்பணிகள் முற்றாக சோர்வடைந்த நிலையில் எவ்விதமான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

நடந்து முடிந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்தைகளின்போது இனம் காணப்பட்ட விடயங்களில் எதுவித முன்னேற்றமும் ஏற்படாததால் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது. உலக வங்கியின் பொறுப்பின் கீழ் இயங்கும் சிரான் அமைப்பும் சரியா முறையில் செயற்படவில்லை. இந்த அரசாங் கத்தின் ஒத்துழைப்பு இன்மையே இந்த அமைப்பு சரியான முறையில் செயற்படமுடியாமைக்குக் காரண மாகும் என்று கூறினார்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் இடம்பெற்ற இச்சந்திப்பில் நோர் வேயின் உயர்மட்டக்குழுவின் சார்பில் நோர்வேயின் வெளிவிவ கார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் இலங்கைக் கான நோர்வே தூதுவர் மற்றும் 6 உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்

விடுதலைப்புலிகளின் சார்பில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் ,விடுதலைப்புலிகளின் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமார், மட்டக்களப்பு,அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான், சிறப்புத் தளபதி கேணல் பதுமன் ஆகியோர் கலந்து கொண்டனர்

நேற்றுக் காலை முதல் பிற் பகல் வரை இடம்பெற்ற இச்சந் திப்பினை அடுத்து நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் நேற்று மாலையே கொழும்பு திரும்பினார் (ம)

### பிரதமருடன்...

ஜனாதிபதி அல்ல,சட்டமா அதிபர் தனது அபிப்பிராயத்தை அரசாங்க அச்சகருக்கு அனுப்பாமல் ஜனாதி பதிக்கு அனுப்பியிருக்கிறார்.நாம் கோரியிருக்காத ஒரு ஆலோசனையை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்று ஜனதாசா பீரிஸ் தெரிவித் திருக்கிறார்.

ஜனாதிபதியின் வர்த்தமானி அறி வித்தலைத் தாமதித்ததன் மூலம் அரசாங்க அச்சகர் தனது பொறுப் பில் இருந்து தவறிவிட்டதாக ஜனா திபதி கருதுகிறார்.அரசியல் சட்ட நிலைப்பாடு பற்றி அவர் தெளிவ டைய விரும்பினால் மேல் நீதிமன் றத்திடம் பிரச்சினையை எடுத்துச் சென்றிருக்கலாம்,சட்டமா அதிபரி டம் ஆலோசனை கேட்டதனாலும் வர்த்தமானி வெளியிடுவதை தாமதித் ததனாலும் அரசாங்க அச்சகர் தனது பொறுப்புகளில் இருந்து தவறிவிட் டார் என்று ஜனதாச பீரிஸ் மேலு தெரிவித்துள்ளார். (த)

### யப்பான்...

தொருபகுதியாகும்.ஏனெனில் அமைதியான வழிமுறைக்கு சர்வ தேச சமூகத்தின் ஆதரவை உறுதிப் படுத்த வேண்டியது அவசியமாகும்.

சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப் பதென்பது.இலங்கையின் இனப் பிரச் சினையில் மிகவும் முக்கியமான தொன்றாகும்.ஈராக் சம்பவத்திலும் சர்வதேச சமூகத்தின் கவனம் முக் கியமாக ஈர்க்கப்பட்டிருந்தது.

பாலஸ்தீனம் மற்றும் ஆபிரிக்க விவகாரங்களும் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளன.

இந் நிலையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ள வேண் டியது அவசியமாகும்.அவர்கள் இரு வரும் இதனைத் தவறவிடக் கூடாது. இக் கருத்தைத் தான் பிரபாகரனி டம் இருந்து பெறமுயன்றேன் ஆனால் அது முடியவில்லை என்றும் ஜோன் பீற்றர்சன் தெரிவித்தார்.(வ)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.